# அறிவோம்! அணி திரள்வோம்!
# உரிமைகளை வெல்வோம்!

**கிராம ஊராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும்**
**தூய்மை காவலர்களுக்கான கையேடு**

**தொகுத்து வெளியிடுவது:**
***முனைவர் அ. சகாய பிலோமின் ராஜ்,*** நெறியாளர்
மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக்குழு

## அய்டியாஸ் வெளியீடு

பெயர் : அறிவோம்! அணி திரள்வோம்! உரிமைகளை வெல்வோம்!

ஆசிரியர் : முனைவர் அ. சகாய பிலோமின் ராஜ், நெறியாளர்,
மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக்குழு

மொழி : தமிழ்

வெளியீடு : அய்டியாஸ்

முதல் பதிப்பு : ஆகஸ்ட், 2024

பக்கங்கள் : 8 + 64

தாள் : 18.6 மேப் லித்தோ

அச்சு எழுத்து : 12 புள்ளி

படிகள் : 1500

உரிமை : அய்டியாஸ் மையம்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

### கிடைக்குமிடம்

**அய்டியாஸ் மையம்**
26–அ, வாழைத்தோப்பு
சிந்தாமணி சாலை
மதுரை – 625 001
தொ.பே.எண்: 0452–2337968
அலைபேசி எண்: 9843788784
மின்னஞ்சல்: ideasmadurai@gmail.com



# பொருளடக்கம்

உட்புகுமுன் iv

அணிந்துரை vii

1 பகுதி 1–கிராம ஊராட்சிகள் அன்றும் இன்றும் 1

2 பகுதி 2–கிராம ஊராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களின் வகைப்பாடுகள் 13

3 பகுதி 3–உள்ளாட்சி அமைப்பில் துப்புரவுப் பணியாளர்களின் நிலை 19

4 பகுதி 4–துப்புரவுப் பணியாளர்களுக்கான சங்கங்கள் – ஒரு பார்வை 23

5 பகுதி 5–தூய்மைக் காவலர்கள் 28

6 பகுதி 6–சாதி ஒழிப்பும் சமூகநீதியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்! 31

7 பகுதி 7–பிற்சேர்க்கை – I 36

பிற்சேர்க்கை – II 41

# உட்புகுமுன்

இந்திய சமூகம் அடிப்படையில் சாதிய சமூகமாகவே இருக்கிறது. சாதியே அனைத்தையும் தீர்மானிக்கிறது. சாதிப்பெயரைப் பெருமையாக எண்ணி பயன்படுத்துவது தொடங்கி, பள்ளி மாணவர்கள் கையில் சாதிக்கயிறு கட்டிக்கொள்வது வரை தினசரி வாழ்க்கையில் சாதி இரண்டறக் கலந்திருக்கிறது.

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி அண்மையில் தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் உள்ள 441 பள்ளிகளில் நடத்திய ஒரு ஆய்வில், வெவ்வேறு வகையில் சாதியத் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுவதை கண்டறிந்துள்ளது. அந்தப் பள்ளிகளில் மொத்தம் 39 வகைப்பட்ட சாதியத் தீண்டாமை வடிவங்கள் ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் நடைமுறையிலிருப்பதைக் கண்டறிந்து தமிழ்நாடு முதலமைச்சரின் பார்வைக்குக் கொண்டு சென்றுள்ளது. இன்றும் கிராமங்கள்தோறும் வெளிப்படையாகவே மக்கள் சாதிகளாகத்தான் பிரிந்து வாழ்கின்றனர். சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, சமய மற்றும் பண்பாட்டுத் தளங்கள் என அனைத்திலும் சாதியே முக்கியமாக கோலோச்சுகிறது. கிராமங்களில் மக்கள் செய்யும் பணிகளும் சாதி அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது.

துப்புரவுப் பணியும் சாதி அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட கடைநிலை சாதியினருக்கு உரியதாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது மனிதக் கழிவுகளோடும், அசுத்தத்தோடும் தொடர்புடையது என்பதால், மற்ற பணிகளைப் போலன்றி, இந்தப் பணியைச் செய்வோரை இந்தச் சமூகம் இழிவானவர்களாகவே கருதுகிறது. அதனால், அவர்கள் மீது ஏராளமான சாதிய வன்கொடுமைகள் அன்றாடம் நிகழ்த்தப்படுகின்றன. வேறு வழியறியாது இப்பணியாளர்கள் அவற்றை சகித்துக் கொண்டும், பொறுத்துக் கொண்டும் போகிறார்கள். இவர்கள் பெரும்பாலும், எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருப்பதால், அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவோர் அவர்களை எளிதாக ஏமாற்றி அடிமைப்படுத்த முடிகிறது. அவர்களின் ஊதியத்தை வழங்குவதில் கூட பெரும் அநீதி இழைக்கப்படுகிறது. அவர்களுக்கு பணியாணை வழங்கப்படுவதில்லை. பணிப்பதிவேடு முறையாக கையாளப்பட்டு அதன் நகல் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் பல ஆண்டுகளாக பணிபுரிவதற்கான ஆதாரமும் இல்லை. அடையாள அட்டை கூட அவர்களிடம் கிடையாது.



இவையெல்லாம் அவர்களின் அடிப்படை உரிமைகள் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

தங்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், பல்வேறு சங்கங்களில் இணைகின்றனர். மாதந்தோறும் சந்தா கட்டுகின்றனர். ஆனாலும், அவர்களின் சங்கடங்கள் அப்படியே நீடிக்கின்றன. அவர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத்தொகை மாதம் தவறாமல் பிடித்தம் செய்யப்பட்டும், அது முறையாக செலுத்தப்படுவதில்லை. அதற்கான அட்டையும் வழங்கப்படாததால், அதன் பலன்களை அவர்கள் அடைய முடியவில்லை. தொழிலாளர்களுக்கான காப்பீடு மற்றும் வைப்புநிதி போன்றவை முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஒட்டுமொத்தத்தில், சமூகத்தின் உயிர்நாடியாகத் திகழும் இவர்கள், தாங்கள் அங்கம் வகிக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் ஊழியர் என்ற அங்கீகாரமும் அடையாளமுமின்றித் தவிக்கின்றனர். செய்ய வேண்டிய பணிகளும், பணி நேரமும் இவர்களுக்கு வரையறுக்கப்படவில்லை. நினைக்கும்போதெல்லாம், பணிக்கு அழைக்கப்படும் கொடுமை. மற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல விடுமுறைகள் வழங்கப்படுவதில்லை. தங்கள் பணியின் நிலை என்னவென்று அறியாமல் பஞ்சாயத்து தலைவர், அலுவலக செயலர் மற்றும் அங்கு வருவோர் போவோர் அனைவருக்கும் நாள் முழுவதும் எடுபிடி வேலை செய்து கொத்தடிமைகளைப் போல இருக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகின்றனர். தங்கள் நியாயமான குறைகளை மேலதிகாரிகளின் பார்வைக்கு எடுத்துச் சென்றும் பலனேதும் விளைவதில்லை. அதனால் முற்றிலும் நம்பிக்கை இழந்து தங்களின் இந்தக் கொடிய நிலையை ஏற்றுக்கொண்டு வாழவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களின் இந்தப் பிரச்சினைகளை நன்கு புரிந்துகொண்டு, அவற்றை களைவதற்காக மிகுந்த அக்கறையுடன் அவர்களை அணிதிரட்டி செயல்பட வேண்டியுள்ளது. அதற்காக அவர்களையும் இணைத்துக் கொண்டு முன்னெடுக்கப்படும் நீண்டகால தொடர் செயல்பாடுகளே இப்பணியாளர்களின் சங்கடங்களைத் தீர்ப்பதற்கு பாதை அமைத்துத் தரும். மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக் குழுவின் கடந்த 9 ஆண்டு கால பணியில் ஏற்பட்ட அனுபவம் அதைத்தான் கற்றுத் தந்துள்ளது. இந்தப் பணிகள் இன்னும் பல மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டால், அது தொழிலாளர்களுக்கு கூடுதல் வலுசேர்க்கும் என்று நம்புகிறேன்.

இந்தப் பணியில், மிகுந்த அக்கறையுடன் களமாடி வரும் அருமைத் தோழர்கள் **முத்துக்குமார், சசிக்குமார், முத்தையா, கண்மணி, அழகுமுத்து, வினோத்குமார், சக்திவேல்** ஆகியோரையும், இந்தக் குழுவுக்காக தோளோடு தோள் கொடுத்து வழக்குகள் நடத்துவதில் முழுமையாக துணை நிற்கும் வழக்கறிஞர்கள் **கருணாநிதி, சாமி, ஸ்டாலின்** ஆகியோரையும் மனதார பாராட்டுகிறேன். இன்னும் பல தோழமை சக்திகளும், அமைப்புக்களும் மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக் குழுவின் முயற்சிகளுக்குத் துணை நிற்கின்றனர். அவர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

எல்லோரும் கரம் சேர்த்து களமாடினால், தூய்மைப் பணியாளர்களும், தூய்மைக் காவலர்களும் எதிர்கொள்ளும் ஏராளமான சங்கடங்களை சட்டங்களின் துணையுடன் களைய முடியும். அத்தகைய முயற்சிகளுக்கு துணைநிற்கும் களப்பணியாளர்களுக்கும், பாதிப்புகளுக்கு உள்ளாகின்ற தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்களுக்கும் **"அறிவோம்! அணி திரள்வோம்! உரிமைகளை வெல்வோம்!"** என்ற இந்த சிறிய கையேடு பயனளிக்கும் என்று நம்புகிறேன். இக்கையேட்டில் இடம்பெற்றுள்ளவற்றை தொகுப்பதற்கு பெரிதும் துணைநின்ற மதுரை சட்ட விழிப்புணர்வுக் குழுவைச் சார்ந்த அனைவரையும் சிறப்பான விதத்தில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இக்கையேட்டிற்கு தொடக்கவுரை எழுதி பாராட்டியுள்ள அய்டியாசு மையத்தின் இல்லத்தலைவர் முனைவர் **ஜோசப் சேவியர், சே.ச.**அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். இக்கையேட்டிற்கு மிகச் சிறப்பான அட்டைப்படத்தை மிக நேர்த்தியாக வடிவமைத்துள்ள நண்பர் **ஜெபசிங் சாமுவேல்**, **B.D.** அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். இக்கையேட்டை கணினியில் ஏற்றி வடிவமைத்த அய்டியாஸ் நூலக உதவியாளர் திருமதி. **சத்யா**வுக்கும் பாராட்டுக்கள். பணியாளர்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள் ஏராளம். அவற்றில் முக்கியமானவைகளைச் சுட்டிக்காட்டி அவற்றிற்கு தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் இந்தக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

தோழமையுடன்,
**முனைவர் அ. சகாய பிலோமின் ராஜ்.**
நெறியாளர்,
மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக்குழு



# அணிந்துரை

ஒவ்வொரு மனிதனுக்கும் நான் யார்? நான் சார்ந்திருக்கும் சமூகத்தின் நிலை என்ன? எனது எதிர்காலத்தை எவ்வாறு தீர்மானிப்பது? போன்ற கேள்விகள் எழுவது நியாயமானதே. ஆனால் இந்தியாவில் சில சமூகத்தினர் இப்படிப்பட்ட கேள்விகளைக் கூட கேட்க இயலாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். உயர்சாதி சமூகங்கள் சில சமூகங்களையும் அதன் உறுப்பினர்களையும் இரும்பு பெட்டகத்தில் வைத்து அடைத்துள்ளது போல், அவர்களின் மேல் பல்வேறு விதமான முத்திரைகளைப் பதித்துள்ளார்கள். இப்படி திணிக்கப்பட்ட முத்திரைகளை தலைமுறை தலைமுறையாக உள்வாங்கி வாழக்கூடிய சமூகங்களில் ஒன்றுதான் தூய்மைப்பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள். இவர்களின் வாழ்வியலை பற்றியதுதான் இந்நூல்.

இந்நூலுக்கு சில தனிச்சிறப்புகளுண்டு. ஒன்று தூய்மை பணியாளர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற இயற்றப்பட்ட சட்டங்கள் எவ்வாறு நடைமுறையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை 9 ஆண்டுகால களப்பணி அனுபவத்தின் விளைவாக ஆராய்ந்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்நூலில் கோபம் இருக்கிறது, வேகம் இருக்கிறது. சட்ட ரீதியாகவும், சட்டத்தையும் தாண்டி மனிதம் மதிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நியாயத்தை கேட்கும் கேள்விகள் பலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இரண்டாவதாக, இந்நூலின் உருவாக்கம் ஒரு கூட்டு முயற்சி. மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக் குழுவின் நெறியாளர் முனைவர் அ. சகாய பிலோமின் ராஜ் அவர்களின் வழிகாட்டுதலில், களப்பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ள முத்துக்குமார், சசிக்குமார், முத்தையா, கண்மணி, அழகுமுத்து, வினோத்குமார் மற்றும் சக்திவேல் இணைந்து உருவாக்கி இருப்பது இந்த நூலின் தனிச்சிறப்பு. இந்த நண்பர்கள் தூய்மை பணியாளர்களின் குழுமத்தை சார்ந்தவர்களாக இருப்பதால், குழந்தைப் பருவத்தில் இருந்தே இவர்கள் நேரடியாக பார்த்த, அனுபவித்த மற்றும் இவர்களின் பெற்றோர்களின் வாழ்க்கை அனுபவங்கள் இந்நூலுக்கு வலு சேர்த்துள்ளது.

இந்நூல் தூய்மை பணியாளர்களை மனத்தில் வைத்து அவர்களுக்கு ஏற்றாற்போல் அவர்களின் சிந்தனைகளை தூண்டும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி மற்றும் உள்ளாட்சியில் பணிபுரியும்

தூய்மை பணியாளர்களின் ஏதார்த்தத்தை படம் பிடித்துக்காட்டி நியாயம் கோருவது மட்டுமல்லாது, தூய்மை பணியாளர்களின் வாழ்நிலை முன்னேற்றம் என்பது தீண்டாமையின் புதிய வடிவங்கள் ஒழிக்கப்படுவதிலும், சாதி ஒழிப்பை முன்னெடுப்பதிலும்தான் அடங்கியுள்ளது என்பதையும், இதன் வழியாக மட்டுமே சமூக நீதியை நிலை நாட்ட முடியும் என்பதையும் இந்நூல் தெளிவாக காட்டுகிறது.

பிற்சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ள தாட்கோ திட்டம் பற்றிய விளக்கம் சில தூய்மை பணியாளர்களின் மேம்பாட்டிற்கு வலுவூட்டும்.

இந்நூலை கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ள தூய்மை பணியாளர்களுக்கு கொண்டு சேர்ப்பது ஒரு மிகப்பெரிய சவால். இதுவே எம் பணியாளர்களுக்கும் இருக்கக்கூடிய ஒரு சவாலாகும். மேலும் இந்நூலை அய்டியாஸ் பணி செய்யும் மதுரை, விருதுநகர், திண்டுக்கல் மாவட்டங்களில் மட்டுமல்லாமல் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் பணியாற்றும் தன்னார்வ குழுக்கள், சிவில் சமூகங்கள், மக்கள் அமைப்புகள், தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்களுக்கும் சென்றடையச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளும் போது இந்நூலின் பயன்பாட்டையும், அதன் வழியாக தூய்மை பணியாளர்களின் வாழ்வில் மேம்பாட்டையும் உறுதி செய்ய முடியும். இந்நூல் பலரின் சிந்தனைகளை கூர்மைப்படுத்தவும், அதன்வழியாக தூய்மை பணியாளர்கள் ஒன்றிணைந்து அவர்களின் எதிர்காலத்தை வென்றெடுக்கவும் வாழ்த்துகின்றேன்.

**முனைவர் ஜோசப் சேவியர், சே.ச.**

அய்டியாஸ், மதுரை



# பகுதி I

## கிராம ஊராட்சிகள் அன்றும் இன்றும்

அரசுத்துறையில் எந்தவொரு பணிக்கும் ஒரு பணியாளரைத் தேர்வுசெய்ய, முறையாக விளம்பரம் செய்து, பணி வரன்முறை, ஊதியம் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் தெரிவித்து எழுத்துத்தேர்வு அல்லது நேர்முகத்தேர்வு நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு நியமன ஆணை வழங்கி பணியமர்த்துவதுதான் நடைமுறை. ஆனால், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் கிராம ஊராட்சிகளில் உள்ள பஞ்சாயத்துக்களில் பணியமர்த்தப்படும் துப்புரவு பணியாளர்களுக்கு இந்த நடைமுறை எதுவுமே ஆரம்ப காலத்தலிருந்தே பின்பற்றப்படுவதில்லை.

### துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தும் நடைமுறை:

கிராம பகுதிகளில் பன்னெடுங்காலமாக துப்புரவு பணிக்கு, சாதிய அடிப்படையில், அந்தந்த கிராமத்தில் வசித்துவரும் குறிப்பிட்ட கடைநிலை சாதியைச் சார்ந்தவர்கள் அப்பணிகளைச் செய்யுமாறு பணிக்கப்பட்டனர். அவர்களும் அதை மறுக்காமல், பிரதிபலன்களை எதிர்பார்க்காமல் துப்புரவு செய்யும் பணியை கடமையுடன் செய்து வந்தனர். ஊதியமோ, பணிநேரமோ, பணியளவோ நிர்ணயிக்கப்படவில்லை. குறிப்பிட்ட பணியாளர் வயதாகிவிட்டாலோ, இறந்துவிட்டாலோ, அவருடைய மகனோ மகளோ அதைத் தொடர வேண்டும். இதுதான் 40 ஆண்டுகளுக்கு முன்புவரை இருந்த வழக்கம். பிறகு, உள்ளாட்சி நிர்வாகம் பொறுப்பேற்றதிலிருந்து முறையாக கிராம சபை தீர்மானம் போட்டு, அதன் அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். தொடர்ந்து கடைநிலை சாதியைச் சார்ந்தவர்களே அதில் நியமிக்கப்பட்டதால், சாதியடிப்படையில் அது இலவச வேலையாகவே கருதப்பட்டது. எனவே, அதற்கு உரிய நியாயமான ஊதியமோ, பணிவரண்முறையோ ஏற்பாடு செய்யப்படவில்லை. அதனைத் தொடர்ந்து, 2013 ஆம் ஆண்டு தமிழக அரசு அரசாணை வெளியிட்டு, தமிழகம் முழுவதும் 16,726 பேரை கிராம ஊராட்சிகளில் துப்புரவுத் தொழிலாளர்களாக நியமனம் செய்தது. அப்போதும் கூட, பணிவரண்முறை, குறைந்தபட்ச ஊதியம், தொழிலாளர்களுக்குரிய சட்ட உரிமைகள் போன்றவற்றை வரையறை செய்து உறுதிசெய்யவில்லை. அரசும் அதில் கவனம் செலுத்தவில்லை.

தொழிலாளர்களும் அதை அறிந்திருக்கவில்லை. அந்தப் பணி முழுக்க முழுக்க தங்களுடைய இனத்திற்காக ஒதுக்கப்பட்ட பணி என்று மட்டும் அவர்கள் நம்பி அதை தங்களின் பிறவிக்கடனாக ஏற்று செய்து வந்தனர்.

### துப்புரவுத் தொழிலாளர்கள் அரசு ஊழியர்களா? கொத்தடிமைகளா?

கிராம பகுதிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் அனைவரும் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் ஒரு அங்கம். எனவே, அவர்கள் அந்தத் துறையில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் என்பது மறுக்க முடியாது. அதன் காரணமாக, அரசு ஊழியர்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் பெற சட்டப்படி தகுதியுள்ளவர்கள். ஆனால், அந்த நிலை அவர்களுக்கு அநியாயமாக மறுக்கப்படுகிறது. அனைத்து நியாயமான சட்ட உரிமைகளையும் மறுத்து, தாங்கள் ஒரு அரசுத்துறையில் பணியாற்றுகின்றோம் என்ற எண்ணமே அவர்களுக்கு வராதவாறு அரசும், அதிகாரிகளும் பார்த்துக் கொள்கின்றனர். இது பல்லாயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்களுக்கு எதிராக இழைக்கப்படும் பெரும் அநீதியாகும். அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்படுவதில்லை. ''எந்த அடிப்படையில் தாம் பணியமர்த்தப்பட்டிருக்கிறோம்'', என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அரசாணைகள் பற்றி தெரியப்படுத்துவதில்லை. பணியிலமர்ந்த நாள் முதல் பணிப்பதிவேடு பதிவுசெய்து, அவற்றின் விவரங்களோ, அவர்களின் ஊதிய விவரங்களோ தெரியப்படுத்துவதில்லை. பணிப்பதிவேட்டினை துவங்கியிருந்தாலும், அதை முழுமையாக பராமரிப்பதில்லை. ஒரு அடையாள அட்டை கூட வழங்குவதில்லை. எனவே, பல ஆண்டுகள் பணியாற்றிய பிறகும், இவர்களில் பலருக்கு அவர்கள் குறிப்பிட்ட அரசுத்துறையில் பணியமர்த்தப்பட்டதற்கான எந்தவொரு ஆதாரமும் இருப்பதில்லை. தாங்கள் குறிப்பிட்டத் துறையில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் என்று சொல்லிக்கொள்ள ஒன்றுமே இல்லை. திட்டமிட்டு, பஞ்சாயத்து தலைவரும், செயலரும் இப்பணியாளர்களின் அறியாமையைப் பயன்படுத்தி, அவர்களின் பணிநிலை குறித்து எதையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தாமலேயே வைத்திருக்கின்றனர். எந்த நேரத்திலும், பணியிலிருந்து அவர்களை நீக்க ஊராட்சித் தலைவருக்கும், செயலருக்கும் அதிகாரம் இருப்பதாகச் சொல்லி மிரட்டி கொத்தடிமைகளைப் போல நடத்துவதற்கு இதுவே காரணமாக இருக்கிறது. இத்தகையப் போக்கு நமது அரசியலமைப்புச் சட்டத்திற்கும், தொழிலாளர் நலச் சட்டங்களுக்கும் புறம்பானது.



### விடுமுறை அடிப்படை உரிமையே!

வாரத்தில் ஒரு நாள் ஊதியத்துடன் கூடிய விடுமுறை என்பது உலகின் அனைத்து வகைத் தொழிலாளர்களுக்குமான அடிப்படை உரிமையாகும். விடுமுறை நாட்களில் ஒரு தொழிலாளி வேலை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், அந்த நாளுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும். அல்லது வேறு ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும். ஆனால், கிராமப்புற தூய்மைப் பணியாளர்களர்களுக்கு பல பஞ்சாயத்துக்களில் வார விடுமுறை வழங்கப்படுவதில்லை. ஏனைய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல ஒவ்வொரு ஆண்டும், அவர்களுக்கு அரசு நிர்ணயித்த மருத்துவ விடுப்பு, சாதாரண விடுப்பு, திருவிழா விடுப்பு போன்றவை அனைத்தும் மறுக்கப்படுகின்றன. ஒருவேளை, உடல்நலன் குன்றி அவசர விடுப்பு எடுத்தால், அவருக்குப் பதிலாக, அவருடைய வீட்டிலுள்ள வேறொருவர் பணி செய்ய வேண்டும். இல்லையென்றால், அந்த நாளுக்கான ஊதியம் பிடித்தம் செய்யப்படுகிறது. இது அப்பட்டமான சட்டமீறல் மட்டுமல்ல, மாறாக, மனித உரிமை மீறலும், தீண்டாமைக் கொடுமையுமாகும்.

### துப்புரவுத் தொழிலாளர்களின் ஆயுட்காலம் குறைவு:

மிகவும் சுகாதாரமற்ற சூழலில், துர்நாற்றம் வீசுகின்ற கழிவுகளை அகற்ற எவ்வித பாதுகாப்பு உபகரணங்களுமின்றி அன்றாடம் பணியாற்றுவதால், கடுமையான உடல் உபாதைகளுக்கும், நோய் தொற்றுகளுக்கும் எளிதில் ஆளாகி விடுகின்றனர். இதனால், இவர்களின் ஆயுட்காலம் வெகுவாக குறைகிறது. பல தொழிலாளர்கள் ஓய்வு பெறும் வயதை எட்டுவதற்குள் இறந்துவிடுகிறார்கள். அன்றாடம், துர்நாற்றம் வீசும் சூழலில் பணியாற்றுவதால், பலரும் உணவருந்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மிகக் குறைந்த வருவாய் காரணமாக தேவையான சத்தான உணவு எடுத்துக்கொள்ள முடியாமல் போவதும் அதற்கு ஒரு காரணம்.

அடையாள அட்டை உள்ளிட்ட அடிப்படை ஆவணங்கள் அடிப்படை உரிமையே! உலகெங்கிலும் உள்ள நடைமுறை என்னவென்றால், அரசு மற்றும் தனியார் அமைப்புக்களில் அனைத்து வகைப் பணியாளர்களுக்கும், பணியாணை, பணிவிவரங்கள், அடையாள அட்டை, சம்பள ரசீது, பணிப்பதிவேடு போன்றவை தனித்தனியே தயார் செய்து கொடுக்கப்படும். பணிப்பதிவேட்டில்தான் அந்த பணியாளர் பணிக்கு அமர்த்தப்பட்ட நாள் முதற்கொண்டு பணியாளரின் பணி தொடர்பான விபரங்கள், ஒழுங்கு

நடவடிக்கை, விதிமீறல்கள் போன்றவை பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்படும். கூடுதலாக, அவருக்கான ஊதியம், அதில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் தொடர் குறிப்புக்கள் இடம்பெறும். அவையாவும், சட்டப்படி கடைப்பிடிக்கப்பட வேண்டியவையாகும். ஆனால், கிராம பஞ்சாயத்து தூய்மைப் பணியாளர்களுக்கு இவையாவும், இன்றுவரை முறைப்படுத்தப்படாமலும், அவர்கள் அறியாத வகையிலும் இருட்டடிப்பு செய்யப்படுகிறது. இந்த ஆவணங்கள் அவர்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளன.

**பணிப்பதிவேடும் நிலுவைத்தொகையும்:**

கிராமப்புற தூய்மை பணியாளர்கள் ஒவ்வொருவரும் தான் பணியாற்றி வரும் ஊராட்சியில், தனக்கான பணிப்பதிவேடு பதிவுசெய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறதா என்பதை அறிந்திருக்க வேண்டும். பணி வழங்கும் அமைப்பு அதை ஏற்பாடு செய்வதோடு, அதன் நகலையும் பணியாளர்களுக்கு வழங்கியிருக்க வேண்டும். கேட்கும்போது, அவற்றை பார்வையிடுவதற்கும், நகல் எடுத்துக் கொள்வதற்கும் உதவ வேண்டும். அதுதான் அவர்கள் அந்த அமைப்பில் பணியாற்றுகிறார்கள் என்பதற்கான அடிப்படை ஆதாரமாகும். அதைக் கேட்டும் கிடைக்கப்பெறாத பணியாளர்கள், மனு எழுதி, தொடர்புடைய அதிகாரிகளிடத்தில் முறையிட்டு அதைப் பெற்றுக் கொள்வது அவசியம். பணிப்பதிவேடு வழியாகத்தான் அரசாணைகள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்ற நிலுவைத்தொகை கணக்கிட்டு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பணியாளரும் பஞ்சாயத்து நிர்வாகத்திடம் தனக்குரிய நிலுவைத்தொகையை கணக்கிட்டு கேட்டு பெற உரிமையுடையவர். அதை வழங்காமல் காலதாமதம் செய்தால், உரிய அதிகாரியிடம், எழுத்துப்பூர்வமாக மனு எழுதி முறையீடு செய்ய வேண்டும். அதற்கான ஆதாரத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும். அது சட்ட நடவடிக்கைக்கு உதவும். இத்தகைய உரிமைகளைப் பெற, நம்பிக்கையான நபர்கள் வழியாக சட்ட நடவடிக்கை எடுக்க பணியாளர்கள் தயங்கக் கூடாது.

**அத்தியாவசியப் பணிகள் பட்டியலில் துப்புரவுப் பணி:**

துப்புரவுப் பணி ஒரு அத்தியாவசியப் பணி. எனவே, அது 24 மணி நேர பணியாகத்தான் இருக்கிறது. ஊராட்சித் தலைவரோ, செயலரோ, கிராம நிர்வாக அலுவலரோ அவசரகாலத்தில் அழைக்கும்போதெல்லாம் சென்று அவர்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அரசு நிர்வாகம் அத்தியாவசியப் பணிகளை அதிமுக்கியப் பணிகள் பட்டியலில் வைத்து, எவ்விதத்திலும் அவை தடைபடாமல் பார்த்துக் கொள்வது அவசியம். அது



மட்டுமல்ல, அத்தகையப் பணிகளில் ஈடுபடுவோருக்கு, முன்னுரிமை அடிப்படையில் அவர்களின் நியாயமான சட்ட உரிமைகளை நிறைவேற்றித் தர வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு உண்டு. ஆனால், அரசு கிராமப் பஞ்சாயத்துக்களில், அத்தியாவசியப் பணியாகிய துப்புரவுப் பணியைச் செய்வோரை வெறுமனே பகுதிநேரப் பணியாளர்களாகவே கருதி, எவ்வித பணிப்பலன்களையும் அவர்கள் அடையாமல் தடுக்கிறது. இது பெருத்த அநீதியாகும்.

**காலமுறை ஊதியமும், நிலுவைத்தொகையும்:**

கிராம பகுதிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களில் 15.09.2010–ஆம் நாளன்று 3 ஆண்டுகள் பணி நிறைவு செய்திருந்த பணியாளர்கள்அனைவரையும் காலமுறை ஊதியம் பெறும் பணியாளர்களாக அரசு அறிவித்தது (G.O. No. 39: நாள்: 07.05.2013). அதன் விளைவாக 9,896 கிராம ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் பயனடைந்தனர். ஆனாலும், அவர்கள் 2024–ஆம் ஆண்டில் பெறும் மாத ஊதியம் வெறும் ரூ. 8,200 மட்டுமே. எந்தவொரு அரசு அமைப்பிலும், இத்தனை ஆண்டுகள் பணியாற்றும் ஊழியர்களுக்கு இவ்வளவு மோசமான ஊதியம் வழங்கப்படுவதில்லை. சாதித்துவேசத்தோடு செயல்படும் சில ஊராட்சி செயலர்களால், பல தொழிலாளர்கள் அதையும் பெறமுடியாத சூழல். பலரின் பெயர்கள் விடுபட்டு, அந்த ஊதிய உயர்வு கூட கிடைக்காமல், வெறும் ரூ. 4,300 மட்டுமே பெறுகிறார்கள். அதேபோல, 2013 ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் பணியமர்த்தப்பட்ட 16,726 துப்புரவு தொழிலாளர்கள் ஏறக்குறைய 7 ஆண்டுகளுக்குப் பிறகு 2020 ஆம் ஆண்டு முதல் காலமுறை ஊதியம் பெறுபவர்களாக அறிவிக்கப்பட்டனர். அதற்கான உத்தரவு 07.01.2020 அன்று பிறப்பிக்கப்பட்டது. அன்று 16,508 துப்புரவுப் பணியாளர்கள் 5 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளதாக, இனங்காணப்பட்டு சிறப்பு கால அட்டணை வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால், அவர்கள் அனைவருக்கும் ஒரே அளவிலான ஊதியம் வழங்காமல், அங்கும் குளறுபடி. தற்போது, ரூ. 6,800 முதல் ரூ. 7,200 என ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒவ்வொரு விதமாக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. அதை ஒழுங்குபடுத்துவதற்கு நீதிமன்றங்களின் கதவுகளைத் தட்ட வேண்டியுள்ளது. இன்னும் கொடுமை என்னவென்றால், பல ஊராட்சிகளில் 2020 ஆம் ஆண்டு முதல் அவர்களுக்கு கணக்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையை வழங்க மறுக்கிறார்கள்.

கேட்கும்போதெல்லாம் 'கணக்கில் பணமில்லை' என்று சொல்லி ஆயிரம் முறை அவர்களை அலைய விடுகிறது கிராம ஊராட்சி நிர்வாகம்.

**ஊதியத்தை அரசு கருவூலம் வழியாக செலுத்தலாமே!:**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் பணியாற்றும் அனைத்து வகைப் பணியாளர்களுக்கும், ஏனைய அரசு பணியாளர்களுக்கு வழங்குவதைப் போல மாதந்தோறும் ஊதியத்தை அரசு கருவூலத்திலிருந்து வழங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது ஊதியம் வழங்குவதில் உள்ள முறைகேடுகளை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

**குறைந்தபட்ச ஊதியச் சட்டம்:**

மனிதர்கள் வெறுமனே உயிர்வாழ்ந்தால் மட்டும் போதாது. மாறாக, ஒவ்வொரு மனிதரும் தானும், தன்னைச் சார்ந்தவர்களும் மானத்தோடும், மாண்போடும், மரியாதையோடும் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். எனவே, ஒரு மனிதர் அவர் எவ்வகைப் பணியைச் செய்பவராக இருந்தாலும், அவரும் அவருடைய குடும்பத்தாரும், அனைத்து அடிப்படை வசதிகளும் பெற்று வாழ்வதற்கு ஏற்ற வகையில் அவருடைய ஊதியம் அமைய வேண்டும். இதுதான் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அடிப்படையாகும்.

ஒவ்வொரு தொழிலாளியும் தனது இல்லாநிலையை அகற்றவும், அவரது பொருளாதார நிலையை உயர்த்தவும் போதிய அளவு சம்பாதிக்க வேண்டும். அதனால், ஒரு மணி நேரத்திற்கு என்ன ஊதியம் என்பது கணக்கிடப்பட்டு வழங்குவதை உறுதி செய்கிறது இந்தச் சட்டம். இந்தியாவில் பொருளாதாரம் ஒரு சிலரது கைகளில், முக்கியமாக முதலாளிகளின் கைகளில் குவிந்துவிடாமல் தடுப்பது அரசின் கடமை. ஆகப்பெரும்பான்மை தொழிலாளர்களுக்கு நீதிமிக்க ஊதியத்தை உறுதிசெய்வதுதான் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் நோக்கம். ஒரேவகை வேலையைச் செய்யும் அனைத்து ஊழியர்களும், ஆண், பெண் பேதமின்றி சமமான ஊதியம் பெறுவதை அரசு உறுதிசெய்ய வேண்டும்.

**குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்:**

1996–ஆம் ஆண்டு, தேசிய அளவிலான குறைந்தபட்ச ஒருநாள் ஊதியம் ரூ. 35 ஆக நிர்ணயிக்கப்பட்டது. 1998 –ல் அது ரூ. 40 ஆகவும், 1999 ஆம் ஆண்டு ரூ. 45 ஆகவும், அதுவே, 2002 ஆம் ஆண்டு ரூ. 50 என்றும்,



2004 ஆம் ஆண்டு ரூ. 66 என்றும் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2023 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஒரு நாள் ஊதியம் ரூ. 684 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த அளவீடு மாநிலத்திற்கு மாநிலம் சற்று வேறுபடுகிறது. மாநில அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியத்தை அனைத்து வகைத் தொழிலாளர்களுக்கும் கிடைப்பதை அந்தந்த மாவட்ட நிர்வாகம் உறுதிசெய்ய வேண்டிய கடமையுள்ளது. இந்தச் சட்டம் ஒட்டுமொத்தப் பணியாளர்களையும், திறன்மிக்க பணியாளர்கள், திறனற்ற பணியாளர்கள் என பகுத்துப் பார்த்து, திறனற்ற பணியாளர்களுக்கு குறைவாகவே குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறது. தூய்மைப் பணியாளர்கள் திறனற்றப் பணியாளர்கள் பட்டியலில் வைக்கப்பட்டு, அவர்களுக்கு மிகக்குறைந்த ஊதியமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், பல நேரங்களில் அதுவும் அவர்களுக்கு எட்டாக்கனியாகி விடுகிறது. குறைந்தபட்ச ஊதியம் 5 ஆண்டுக்கொரு முறை விலைவாசி குறியீட்டு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு நியாயமான ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதையும் ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை. 2024 ஆம் ஆண்டு அரசு ஆணைப்படி கிராம பஞ்சாயத்துக்களில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 419 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு கணக்கிட்டு வழங்குவதில்லை. மாறாக, 3 வகை கிராமப் பஞ்சாயத்துக்களில் அந்தந்த பஞ்சாயத்தின் வகைக்கேற்ப மாத ஊதியம் ரூ. 5,800, ரூ. 6,800 மற்றும் ரூ. 7,800 என்று கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. அனைவரின் பணி அளவும், பணியின் தன்மையும் ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் பெருத்த வேறுபாடு கடைப்பிடிக்கப்படுகிறது. பல முறை கோரிக்கைகள் வைத்தும், அரசு நிர்வாகம் இதை சரிசெய்ய மறுக்கிறது.

அரசாணை 2D எண்: 62, நாள்: 11.10.2017–இன் படி, கிராம ஊராட்சிகளில் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ. 12,500/–மும் மாநகராட்சிகளில் ரூ.18,000/– வரையிலும் வழங்கப்பட வேண்டும். ஆனால், நகர்ப்பகுதிகளில் அதிகபட்சமாக ரூ.8,000 முதல் ரூ. 9,000 வரை வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளில், ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு விதமாக மாத ஊதியம் கணக்கிடப்பட்டு குறைவாகவே வழங்கப்படுகிறது. இவை தவிர வேறு எந்த பலன்களையும் அவர்கள் பெறுவதில்லை.

இதே கிராம ஊராட்சியில் பணிபுரியும் கிராம ஊராட்சி செயலருக்கு ஒரு நாள் ஊதியம் ரூ. 1000/– வரை வழங்கப்படுகிறது. இவர்களும் 2019 ஆம்

ஆண்டுக்கு முன்புவரை பகுதிநேரப் பணியாளர்களாகக் கருதப்பட்டு மிகக் குறைந்த ஊதியமே பெற்று வந்தனர். ஆனால், அவர்களின் தொடர் போராட்டத்தின் விளைவாக, கடந்த 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் அவர்களுடைய பணி ஒழுங்குபடுத்தப்பட்டு, காலமுறை ஊதியம் பெறும் நிலைக்கு உயர்த்தப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அரசு ஊழியர்களாக முறைப்படுத்தப்பட்டுள்ளனர். உள்ளாட்சி அமைப்பின் இயக்குனர் பொறுப்பில் உள்ள ஒரு உயர் அதிகாரிக்கு ஒரு நாள் ஊதியம் ரூ. 4,000 க்கு குறையாமலும், அவருக்கு கீழ்நிலை அதிகாரிக்கு ஒரு நாள் ஊதியமாக ரூ. 3,000 க்கு குறையாமலும், வழங்கப்படுகிறது. இப்படி நிறைவான ஊதியத்தைப் பெறுகின்ற இந்த அதிகாரிகள்தான், தாங்கள் சார்ந்திருக்கின்ற துறையின் கடைநிலை ஊழியர்களான துப்புரவுப் பணியாளர்கள் நீண்ட காலமாக மிகக் குறைந்த ஊதியம் பெறுகிறார்களே! அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமே! என்று ஒருபோதும் கருதுவதில்லை.

**சம வேலைக்கு சம ஊதியம்:**

“சம வேலைக்கு சம ஊதியம்” என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் “அரசுக்கு வழிகாட்டு நெறிகள்” பகுதி குறித்துக் காட்டும் சமூகநீதிக் கோட்பாடுகளில் ஒன்று. அதன் உறுபு 39 அரசுக்கு இது குறித்து வழிகாட்டுகிறது. அதைத் தழுவி உச்சநீதிமன்றமும் பல்வேறு தீர்ப்புக்களில் இதை வலியுறுத்தியுள்ளது. “ஊதியத்தில் பாலின அடிப்படையில் பாகுபாடு கூடாது” என்பது முதன்மையான நெறியாக இருந்தாலும், “ஒரே மாதிரியான பணிகளுக்கு வெவ்வேறு வகைப்பட்ட ஊதிய நிர்ணயம் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் சமத்துவப் பிரிவுக்கு எதிரானது” என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. மத்திய மாநில அரசுகள் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். துப்புரவு பணிகளில் தொழிலாளர்களின் ஊதியத்தில் மிகுந்த பாகுபாடு கடைப்பிடிக்கப்படுவதை தடுக்க தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். துப்புரவுப் பணியானது அனைத்து உள்ளாட்சி அமைப்புக்களிலும் ஒரே மாதிரியானதாக இருக்கும்போது, வழங்கப்படும் ஊதியத்தில் மட்டும் வேறுபாடுகள் இருப்பதை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். நிரந்தரப் பணியாளர்களுக்கும், இதர வகைப்பட்ட பணியாளர்களுக்கும் ஊதியத்தில் பெருத்த வேறுபாடு நிலவுகிறது. ஒப்பந்தப் பணியாளர்களும், தினக்கூலிகளும், தொகுப்பூதியம் பெறுவோரும் நிறைவாக வேலைசெய்து



மிகக் குறைந்த ஊதியமே பெற வேண்டிய அவலம். நிரந்தரப் பணியாளர்களுக்குரிய வேறு எந்த பலன்களும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. பணிநேரமும், பணியின் வகையும் ஒன்றுதான். ஆனால், ஊதியம் மட்டும் மிகமிகக் குறைவு.

**உள்ளாட்சி அமைப்புகளில், வெவ்வேறு பணிநிலைகளில் தூய்மைப் பணியாளர்கள் பெறும் மாத ஊதியம்:**
**(2023 நிலவரப்படி)**

| வ எண் | பணிவகை | மாநகராட்சி | நகராட்சி | பேரூராட்சி | ஊராட்சி |
|---|---|---|---|---|---|
| 1 | நிரந்தரப் பணியாளர்கள் | ரூ. 17,500 முதல் ரூ. 45,000 வரை | ரூ. 17,500 முதல் ரூ. 27,000 | ரூ. 17,500 முதல் ரூ. 23,000 | யாருமில்லை |
| 2 | ஒப்பந்த ஊழியர் | ரூ. 13,650 | ரூ. 6,000 | ரூ. 8,000 | யாருமில்லை |
| 3 | மகளிர் குழு மூலம் பணியமர்த்தப் படுவோர் | யாருமில்லை | யாருமில்லை | ரூ. 6,000 முதல் ரூ. 8,000 | யாருமில்லை |
| 4 | தினக்கூலிகள் | ரூ. 16,000 | யாருமில்லை | யாருமில்லை | யாருமில்லை |
| 5 | காலமுறை ஊதியம் | யாருமில்லை | யாருமில்லை | யாருமில்லை | ரூ. 7,800 முதல் ரூ. 8,200 |
| 6 | தொகுப்பூதியம் | ரூ. 25,000 | யாருமில்லை | யாருமில்லை | ரூ. 4,300 முதல் ரூ. 6,850 |
| 7 | மதிப்பூதியம் | யாருமில்லை | யாருமில்லை | யாருமில்லை | ரூ. 5,000 |

**பணியாளர்கள்**

**வருங்கால வைப்புநிதி, ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை:**

“வருங்கால வைப்புநிதி” என்பது அனைத்து வகைத் தொழிலாளர்களுக்கும், அவர்கள் ஓய்வுபெற்றவுடன், வயோதிகக் காலத்தில் மற்றவர்களை சார்ந்து வாழாமல், மாண்போடும், நிம்மதியோடும் வாழ்வதற்கு வழிசெய்யும் மகத்தான திட்டம். தொழிலாளர் பணியிலிருக்கும்போதே, அவர்களின் ஊதியத்தில் குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் பிடித்தம் செய்து, நிர்வாகம் அதற்கு இணையான தொகையை செலுத்தி

எதிர்காலத்திற்காக சேகரித்து வைத்து, ஓய்வுபெறும்போது மொத்தமாக அந்த தொழிலாளிக்கு வழங்குகின்ற நடைமுறையாகும்.

தொழிலாளி ஓய்வுபெற்றவுடன், அவருக்கு ஊதியம் நிறுத்தப்படுகிறது. திடீரென்று ஊதியமின்றி அவரால் வாழ முடியாது. அதனை ஓரளவுக்கு ஈடுகட்டுவதற்கு ஒவ்வொரு மாதமும் அவர் பணியாற்றிய காலத்தின் அளவிற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்டத் தொகை கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கப்படும் தொகைதான் ஓய்வூதியம் எனப்படுகிறது. இது உலகில் வாழும் அனைத்து வகைத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமையாகும்.

அதேபோல, ஒவ்வொரு தொழிலாளரும் ஓய்வுபெறும்போது, தங்களின் உழைப்புக்காக சட்டப்படி பணிக்கொடை பெற தகுதியுடையவர்கள். அது அவர்களின் பல ஆண்டு உழைப்பைப் பாராட்டி நிர்வாகத்தால் வழங்கப்படும் கொடையாகும். பணியாளர் கடைசி மாதத்தில் 15 நாட்கள் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியை கூட்டி, அதை அவர் பணியாற்றிய ஆண்டுகளால் பெருக்கி அதை 26 ஆல் வகுத்து பெறப்படும் தொகையை அந்த பணியாளரின் பணிக்கொடையாக வழங்குகின்ற நடைமுறையை சட்டம் ஏற்படுத்தியுள்ளது. வருங்கால வைப்புநிதி, ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை போன்றவை உலகின் அனைத்து வகைப்பட்ட தொழிலாளருக்கும் உறுதிசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமையாகும். இது உலகளாவிய சட்டங்களாலும், பல நாட்டு சட்டங்களாலும் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால், கிராம ஊராட்சிகளில் தூய்மைப் பணியிலும், தூய்மைக் காவலர் பணியிலும் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான கடைநிலைத் தொழிலாளர்களுக்கு இது முறையாக ஏற்பாடு செய்து வழங்கப்படுவதில்லை. இதுவும் அரசுகளின் அப்பட்டமான சட்டமீறலாக இருக்கிறது.

### பணி நிறைவு ஒட்டு மொத்தத் தொகையும், சிறப்பு ஓய்வூதியமும்

01.10.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையின் படி, 2017 ஆம் ஆண்டுக்கு பிறகு பணி ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு ஒட்டு மொத்தத் தொகையாக ரூ. 50,000 மும் ஓய்வூதியமாக மாதம் ரூ. 2,000 மும் வழங்கப்பட வேண்டும். இது எந்த அடிப்படையில் கணக்கிட்டு வழங்கப்படுகிறது என்பதற்கு அரசு நிர்வாகத்திடமிருந்து எவ்வித பதிலும் இல்லை. வழக்கமாக, பணி நிறைவு பெறும்போது பணிக்கொடையையும், ஓய்வூதியத்தையும் கணக்கிடுவதற்கு எல்லா அமைப்புக்களிலும் ஒரு நடைமுறை பின்பற்றப்படுவதுண்டு. அப்படி எந்த நியாயமான நடைமுறையையும் பின்பற்றாமல், மிகக் குறைவான தொகையை



நிர்ணயம் செய்திருப்பது மோசமான முன்னுதாரணமாகும். இன்னும் கொடுமையென்னவென்றால், இந்த மிகக் குறைவான தொகையை பெறுவதற்கும் ஓய்வுபெற்ற பிறகு, ‘நிர்வாகத்தில் பணம் இல்லை’ என்ற காரணத்திற்காக பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கிடையில், அவற்றின் பலன்களை பெறாமலேயே பல தொழிலாளர்கள் இறந்து போவதும் உண்டு.

### தொழிலாளர்களுக்கான மருத்துவக் காப்பீடு:

தொழிலாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றொரு மகத்தான திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களும், அவர்களுக்காக சிறப்பாக நிறுவப்பட்டுள்ள தொழிலாளர் நல மருத்துவமனைகளில் இலவசமாக தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் சிகிச்சை பெற முடியும். மாதம் ரூ. 15,000 அல்லது அதற்குக் குறைவான வருமானம் உள்ள அனைத்து ஊழியர்களும், அவர்களின் ஊதியத்தில் 0.75 சதவீதம் மட்டும் பிடித்தம் செய்து, அதனுடன் நிர்வாகம் 3.25 சதவீதம் பங்களிப்பு செய்து ஒவ்வொரு மாதமும் வழங்கி இத்திட்டத்தின் பலன்களை தொழிலாளர்களுக்குப் பெற்றுத்தர வேண்டும். ஆனால், இத்திட்டம் கிராம ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கும், தூய்மைக் காவலர்களுக்கும் இதுவரை செயல்படுத்தப்படாததால், அதன் பலன்களை தொழிலாளர்களும், அவர்களின் குடும்பத்தாரும் பெற முடியாமல் போகிறது. அதற்கு பதிலாக, ஒவ்வொரு தொழிலாளியிடமும் மாதம் ரூ. 300 சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது. அதற்கான இரசீது வழங்கப்படுவதில்லை. மருத்துவக்காப்பீடு அட்டையும் வழங்கப்படவில்லை.

### குழுகாப்பீடும் அதன் பலன்களும்:

தற்போது ஊராட்சிகளில் பணியாற்றும் ஒவ்வொரு தூய்மைப் பணியாளரிடமிருந்தும், ஒவ்வொரு மாதமும் அவர்களின் ஊதியத்திலிருந்து ரூ. 110 குழுகாப்பீட்டுத்தொகை பிடித்தம் செய்யப்படுகிறது. இதன்மூலம், ஒருவேளை, பணியின்போது தொழிலாளி மரணமடைந்தால், அவருடைய குடும்பத்திற்கு நிவாரணநிதியாக ரூ. 5,00,000 வழங்கப்படும். அதற்காக, பிடித்தம் செய்யப்படும் தொகையை ஊராட்சி செயலர்கள் முறைப்படி அரசு கருவூலத்தில் செலுத்தி, ரசீது பெற்று அவற்றை முறையாகப் பராமரிக்க

வேண்டும். ஒருவேளை, பணியாளர் மரணமடைய நேரிட்டால், பராமரித்து வரும் ஆவணங்களை முறைப்படி காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பி உரிய நிவாரணத்தை பணியாளரின் குடும்பத்திற்கு காலதாமதமின்றி பெற்றுத் தருவது ஊராட்சி நிர்வாகத்தின் கடமை. ஆனால், பல பஞ்சாயத்துக்களில் பணம் பிடித்தம் செய்யப்பட்டாலும், அது முறையாக செலுத்தப்பட்டு அதற்கான ஆவணங்கள் பராமரிக்கப்படுவதில்லை. இதனால், அவற்றின் பலன்களை சிலர் அடைய முடியாமலேயே போகிறது. அல்லது அதைப் பெறுவதில் பெரும் காலதாமதம் ஆகிறது.

**ஊராட்சி செயலர் மற்றும் மேலதிகாரிகளின் அலட்சியம்:**

ஊராட்சி செயலர்களின் அலட்சியத்தாலும், பணியாளர்களின் பணிப்பதிவேடுகளை முறையாக பராமரித்து குறிப்புக்களை அந்தந்த காலகட்டத்தில் பதிவு செய்யாத காரணத்தாலும், குழுக்காப்பீடு உள்ளிட்ட எண்ணற்ற பலன்களை பணியாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் குறித்த நேரத்தில் பெற முடியாமல் போகிறது. பல பஞ்சாயத்துக்களில், பணியாளரிடமிருந்து பிடித்தம் செய்யும் குழுக்காப்பீட்டுக்கான பணத்தை 3 அல்லது 5 ஆண்டுகள் வரை கருவூலத்தில் செலுத்தாமல் இருப்பது போன்ற அலட்சியப் போக்கினை பரவலாக காண முடிகிறது. இதனால், பணியாளர்களுக்கு முறைப்படி வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையையும் கணக்கிட்டு வழங்காமல் இழுத்தடிக்கும் நிலை நீடிக்கிறது. ஊராட்சி செயலர்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காக செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட உதவி இயக்குனர் ஆகியோர் அவற்றை சரியாக கண்காணிக்காததன் விளைவாக, பல தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறு ஊராட்சி செயலர் முதல் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகளின் அலட்சியத்தால் பாதிக்கப்படும் பணியாளர்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்க சட்ட உதவிகளைப் பெற வேண்டும்.



# பகுதி 2

## கிராம ஊராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களின் வகைப்பாடுகள்

கிராம ஊராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களை காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறுவோர் என மூன்று பிரிவாக வகைப்படுத்தி உள்ளனர்.

**சிறப்பு காலமுறை ஊதியம்:**

காலமுறை ஊதியம் பெறுவோர் குறைந்தது 20 முதல் 30 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். யாரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு அடிமட்ட சம்பளத்திற்கு பணியமர்த்தப்பட்ட இவர்களுக்கு இத்தனை ஆண்டுகள் கடந்த பிறகும், அதிகபட்சமாக மாதம் ரூ. 8,250 மட்டுமே வழங்கப்படுகிறது. அந்த ஊதியமும் நீண்ட காலம் பணியாற்றும் அனைவருக்கும் உறுதி செய்யப்படவில்லை. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் இருப்பதைப் போலவேதான் இவர்களின் பணியின் அளவும், பணி நேரமும், தன்மையும் உள்ளன. ஆனால், அவர்களது பணி மற்ற அரசு ஊழியர்களைப் போல ஒழுங்குபடுத்தப்படவில்லை. எனவே, அவர்கள் நிரந்தரப்படுத்தப்படாமலே ஓய்வு பெற்று விடுகின்றனர். இவர்களில் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளபடி, 01.10.2017–க்கு பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டும் மாதம் ரூ. 2,000 ஓய்வூதியமாகவும், ரூ. 50,000 ஒட்டுமொத்தத் தொகையாகவும் வழங்கப்பட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், 01.10.2017–க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு அந்த சிறிய பலன்களும் கிடையாது. எந்த அடிப்படையில் இப்படிப்பட்ட கால நிர்ணயம் செய்யப்பட்டது என்பது புரியாத புதிர். இது பல்லாண்டுகள் பணியாற்றிவிட்டு, 2017–க்கு முன்பு ஓய்வுபெற்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும். அரசு ஆணைகளின்படி, ஒரு துப்புரவுப் பணியாளர் 3 ஆண்டுகள் பணி செய்திருந்தாலே, அவர் காலமுறை ஊதியம் பெற தகுதியுள்ளவர் ஆகிறார். அப்படியிருக்க, 01.10.2017–க்கு பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டும் இந்தப் பலன்கள் கிடைக்கும் என்ற ஏற்பாடு நியாயமானதல்ல.

**காலமுறை ஊதியமும், தவறான கணக்கீடும்:**

அரசின் பல்வேறு அரசாணைகளின்படி, கிராம ஊராட்சிகளில் 3 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியவர்களை காலமுறை ஊதியம் பெறும் நிலைக்கு உயர்த்தியிருக்க வேண்டும். இந்த நடைமுறை உரிய நேரத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை. இதனால், தொழிலாளர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமின்றி, காலமுறை ஊதியம் பெறும் நிலைக்கு உயர்த்தியது முதல் ஆண்டுக்கு 3 சதவீத ஊதிய உயர்வும், தர ஊதியமாக ஆண்டுக்கு ரூ. 300 ம் உயர்த்தி வழங்கப்பட வேண்டும். அப்படி ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் ரூ. 350 ஊதிய உயர்வு இருந்தாலே 2013ஆம் ஆண்டு பணியமர்த்தப்பட்ட ஒவ்வொரு பணியாளரும் 01.04.2024 அன்று குறைந்தபட்சம் ரூ, 10,500 க்கு மேல் ஊதியமாக பெற வேண்டும். அதற்கேற்ற நிலுவைத்தொகை 2016 ஆம் ஆண்டு முதல் கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உள்ளாட்சி நிர்வாகம் இப்பணியாளர்களின் ஊதியத்தை அரசாணைகளின் அடிப்படையில் கணக்கீடு செய்யும்போது, துல்லியமாக கணக்கீடு செய்யாததால், அதில் பெரும் குழப்பம் ஏற்பட்டு பெற வேண்டிய ஊதியத்தை அவர்கள் முழுமையாக பெற முடியாமல் போகிறது. இழப்பது தொழிலாளர்களே!

**தொகுப்பூதியம்:**

கிராம ஊராட்சிகளில், 3 ஆண்டுகள் பணி நிறைவடையாத பணியாளர்களே தொகுப்பூதியப் பணியாளர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். தொகுப்பூதிய அடிப்படையில் ஏராளமானோர் துப்புரவு பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். வழக்கமாக, 3 ஆண்டுகள் பணி நிறைவு செய்த பிறகு, இவர்கள் சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யத் தவறியதால், ஏராளமானோர் பல ஆண்டுகளாக தொகுப்பூதியம் பெறுபவர்களாகவே நீடிக்கின்றனர். இவர்களுக்கு பணியமர்த்தப்படும்போது ரூ. 2,060 வழங்கப்பட்டு, இன்று அதிகபட்சமாக ரூ. 6,800 வழங்கப்படுகிறது. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பணியாளர்களைப் போலவே இவர்களது பணி நேரமும், பணி அளவும், அவற்றின் தன்மையும் ஒன்றாகவே உள்ளது. ஆனால், ஊதியத்தை தவிர வேறு எந்தவிதமான பணப்பலன்களும் இவர்களுக்கு கிடைப்பதில்லை.



**மதிப்பூதியம்:**

கிராம ஊராட்சிகளில், அந்தந்த ஊராட்சிகளில், அப்போதைக்கப்போது, ஏற்படும் தேவையினடிப்படையில், கணிசமான பணியாளர்கள் துப்புரவுப் பணிக்கென மதிப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்படுகின்றனர். அப்படி நியமிக்கப்பட்டவர்களுக்கு தொடக்கத்தில் மாத ஊதியம் ரூ. 2,020 என மதிப்பிட்டு வழங்கப்பட்டது. இவ்வகைப் பணியாளர்களும் பல ஆண்டுகளாக ஒழுங்குபடுத்தப்படாமல், கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அவர்களின் மாத ஊதியம் ரூ. 5,000 என உயர்த்தி வழங்கப்படுகிறது. இவர்கள் குறைந்தபட்சம் 6 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். ஆனால், அவர்களையும் சட்டப்படி சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களாக அரசு அறிவிக்கவில்லை. இவர்கள் தங்களின் பணிநிலை குறித்த சட்டங்களையும், அரசாணைகளையும் அறியாமல் இருப்பதால், கடுமையான உழைப்புச் சுரண்டல்களுக்கு ஆளாகின்றனர். இப் பணியாளர்களின் உரிமைகளுக்காக பணியாற்றி வரும் தொழிற்சங்கங்கள் இவற்றைப் பற்றி தெரிந்துகொண்டு, பணியாளர்களுக்கு அவற்றைத் தெரியப்படுத்தி, இந்த உழைப்புச் சுரண்டலைத் தடுக்க முன் வர வேண்டும். பணியாளர்களை வெவ்வேறு வகைப்பட்ட ஊதியம் பெறுபவர்களாக வைத்திருப்பதே சட்டமீறலாகும். அனைவரும் ஒரேவகைப் பணியாளர்களாக அறிவிக்கப்பட வேண்டும்.

**ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில்:**

கிராம ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் துப்புரவு செய்வதற்காக 33,587 நபர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் எந்த வகைப்பட்ட ஊதிய நிர்ணயமும் இன்றி அல்லலுறுகின்றனர். இவர்களை அரசு நிர்வாகம் வெறுமனே வெளிச்சந்தைப் பணியாளர்களாகவே வைத்திருக்கிறது. இதனால், அவர்களுக்குரிய எவ்வித சட்டப் பலன்களையும் அவர்களால் பெற முடிவதில்லை. பல ஆயிரம் தனியார் பள்ளிகளிலும் இதே கொடுமை உள்ளது. எத்தனை ஆயிரம் மாணவர்கள் படித்தாலும், துப்புரவுப் பணிக்கென ஒரு நபரை மட்டும் நியமித்துவிட்டு, பலவகைப்பட்ட பணிகளையும் செய்ய அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவர்களின் உழைப்பும் கடுமையாக சுரண்டப்படுகிறது. எவ்வித நியாயமுமின்றி, மிகமிக குறைவான ஊதியமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது. தொழிற்சங்கங்களும், அரசு நிர்வாகமும் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

**ஊராட்சிகளில் நிரந்தரப் பணி என்ற பேச்சுக்கே இடமில்லை:**

மேற்சொன்ன பல வகைப்பட்டப் பணியாளர்கள் பல ஆண்டுகளாக கிராம ஊராட்சிகளில் தொடர்ந்து பணியாற்றி வந்தபோதிலும், அவர்களை நிரந்தரப்படுத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லாத வகையில், அரசு நிர்வாகம் பார்த்துக் கொள்கிறது. அதேவேளையில், இப்பணியாளர்கள், தாங்கள் என்றாவது ஒரு நாள் நிரந்தரமாக்கப்படுவோம் என்ற அபார நம்பிக்கையிலேயே பல இடர்பாடுகளுடன் இந்தப் பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர். ஆனால், பணி நிரந்தரம் என்பது இவர்களுக்கு கானல் நீராகவே உள்ளது. இது தொடர்பாக தொடரப்படும் வழக்குகளில் நீதிமன்றங்களும், சட்டத்தின் வழிநின்று அரசு நிர்வாகத்திற்கு உத்தரவுகளைப் பிறப்பிக்க முன்வருவதில்லை. துப்புரவுப் பணியாளர்களின் பிரச்சினைகள் பல நீதிபதிகளுக்கு ஒரு பிரச்சினையாகவே தெரிவதில்லை. ஒரு சில நீதிபதிகளே இப்பிரச்சினைகளில் கவனமுடன் செயல்பட்டு நீதி வழங்குகின்றனர்.

**பணி குறித்த நடைமுறை விதிகளின் அவசியம்:**

கிராம ஊராட்சித் துப்புரவுப் பணியாளர்களின் பணிகள் குறித்த தெளிவான, விளக்கமான நடைமுறை விதிகள் எதுவும் உருவாக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அப்படி உருவாக்கப்பட்டிருந்தாலும், அவைபற்றி பணியாளர்கள் அறியாமலேயே வைக்கப்பட்டுள்ளனர். அவற்றைப் பற்றி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் இணையதளத்திலும் தரப்படவில்லை. அதனால்தான், இந்தப் பணியாளர்கள் ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சித் தலைவர்களால் பந்தாடப்படுகின்றனர். தங்களுடைய பணிச்சூழலில், ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் சங்கடங்களைக் களைய வழியின்றி தவிக்கின்றனர்.

**மக்கள் தொகைக்கேற்ப கூடுதல் பணியாளர்களுக்கான தேவை:**

எந்தவொரு பணியிலும், அவற்றின் சேவையும், தரமும் குறையாமல் இருக்க, அப்பணிகளில் உள்ள காலியிடங்கள் அப்போதைக்கப்போது நிரப்பப்பட்டாக வேண்டும். அதிலும், துப்புரவுப்பணி போன்ற அத்தியாவசியப் பணிகளில் இது 100 சதவீதம் கட்டாயமாக உறுதிசெய்யப்பட வேண்டும். ஆனால், 2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு கிராம ஊராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு அரசு தடை விதித்துள்ளது. அதன்



விளைவாக, கடந்த 11 ஆண்டுகளாக கிராம ஊராட்சிகளில் உள்ள துப்புரவுப் பணிக்கான காலியிடங்கள் நிரப்பப்படவேயில்லை. அரசின் இந்த நிலைப்பாடு, சட்டப்புறம்பானதும் அநியாயமானதுமாகும். ஒருபக்கம், மக்கள்தொகை பெருக்கம், மறுபக்கம், பல பணியாளர்கள் ஓய்வு பெற்று விடுகின்றனர். அல்லது இறந்துபோகின்றனர். இச்சூழலில், கிராம ஊராட்சிகளில் பல ஆயிரக்கணக்கான பணியிடங்கள் காலியாகவே வைக்கப்பட்டு, ஏற்கனவே பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு அவர்களின் பணிச்சுமையை இரட்டிப்பாக்கியுள்ளது. பணியாளர்கள் கடுமையான மன அழுத்தத்திற்கும் ஆளாகி வருகின்றனர். அநீதியானதும் சட்டப்புறம்பானதுமான இந்தப் போக்கை அரசு உடனடியாக மாற்றி அந்தந்த ஊராட்சிகளில், தற்போதைய மக்கள்தொகைக்கு ஏற்ப, தேவையான பணியாளர்களை போர்க்கால அடிப்படையில் பணியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியப் பணிகள்:**

பஞ்சாயத்தில் உள்ள கிராமங்களின் சுத்தம், பசுமை, ஆரோக்கியமான சூழல், அடிப்படை வசதிகள், பொருளாதார வளர்ச்சி, வறுமை நிலை அகற்றல் ஆகியவையே உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய பணியாகும். இவற்றில் தூய்மைப் பணியே முக்கியமான பணியாக இருப்பதால், மொத்தமுள்ள தொழிலாளர்களில் 80% பேர் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்கள் திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, குப்பைகளை அகற்றுதல், சாக்கடைகளையும், கழிவறைகளையும் சுத்தம் செய்கின்ற பணிகளை மேற்கொள்கின்றனர். அவை தவிர, குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு, மயானம், பூங்காக்கள், சாலைகள், நோய் தடுப்பு என அவசர காலங்களிலும், பேரிடர் ஏற்படும் போதும், பெருந்தொற்று காலங்களிலும் அவசியமான எல்லாவிதப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

துப்புரவுப் பணிகளில் உயிருக்கே கேடு விளைவிக்கும் விஷக் கழிவுகள்:

- இப்பணிகளைச் செய்வோர், எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி, மனிதக் கழிவுகளையும், உயிருக்கே கேடு விளைவிக்கும் பிற கழிவுகளையும் துப்புரவு செய்யும் ஆபத்தான பணிகளை அன்றாடம் செய்ய வேண்டியுள்ளது. துப்புரவுப் பணிகளில் விஷக் கழிவுகள் கலந்திருப்பது எதார்த்தம்.

◆ கழிவுநீர் குழாய்கள், பாதாளச் சாக்கடை மற்றும் வீட்டு கழிவுகிடங்குகள் ஆகியவற்றில் அடைப்புகள் ஏற்படும்போது அவற்றை அகற்றுவது, சுகாதாரக் கேடு விளைவிக்கும் கழிவறைகளை சுத்தம் செய்வது போன்ற துர்நாற்றம் வீசும் பணிகளையும் தூய்மைப் பணியாளர்களே செய்ய வேண்டியுள்ளது.

◆ இத்தகைய பணிகளில் ஈடுபடுவதன் காரணமாக நுரையீரல் பாதிப்பு, காசநோய், ஆஸ்துமா, புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்கு ஆளாகின்றனர்.

◆ துர்நாற்றத்தின் நெடியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள மது அருந்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். அதுவே அவர்களை குடிக்கு அடிமையாக்குகிறது.

◆ தேவையான பணியாளர்கள் பணியமர்த்தப்படாததால், வேலைப்பளு காரணமாகவும், பல்வேறு நோய்களுக்கு ஆளாகியும் இளம் வயதிலேயே பலரும் மரணமடைகின்றனர்.

◆ கழிவுநீர் தொட்டியில் இறங்கி விஷவாயு தாக்கி உயிரிழப்போர் ஏராளம். தமிழகம் விஷவாயு மரணங்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே 2 ஆவது இடம் வகிக்கிறது.

◆ 60 சதவீதம் தொழிலாளர்கள் பணி ஓய்வு பெறும் முன்பே மரணம் அடைந்து விடுவதாகவும், இவர்களின் சராசரி ஆயுட்காலம் 45 ஆண்டுகள் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இக்கொடுமைகளைத் தடுக்க வேண்டுமெனில், தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், தொழில்நுட்பக் கருவிகள் போன்றவற்றை வழங்குவதோடு தேவையான அளவு பணியாளர்களையும் பணியமர்த்த வேண்டும். கூடுதலான உள்கட்டமைப்பு வசதிகள், மருத்துவ சேவை, நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றையும் பணியாளர்களுக்கு உறுதி செய்ய வேண்டும். இவை அனைத்திற்கும் தேவையான நிதியை அரசு ஒதுக்கி தீவிர கவனம் செலுத்த வேண்டும்.



# பகுதி 3

## உள்ளாட்சி அமைப்பில் துப்புரவுப் பணியாளர்களின் நிலை

தமிழ்நாட்டில் உள்ளாட்சி நிர்வாகம் 1) மாநகராட்சி, 2) நகராட்சி, 3) பேரூராட்சி, 4) ஊராட்சி என வகைப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. அனைத்து அமைப்புக்களிலும் துப்புரவுப் பணி என்பது அடிப்படைப் பணியாக உள்ளது. இருந்தபோதிலும், துப்புரவுப் பணியாளர்களின் பிரச்சினைகள் எல்லா அமைப்புக்களிலும் தீராததாகவே தொடர்கிறது.

**மாநகராட்சிகள்:**

10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பகுதிகளை மாநகராட்சியாக வகைப்படுத்தியுள்ளனர். தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள் இருந்தன. மக்கள்தொகை பெருக்கத்தின் காரணமாக, இன்னும் கூடுதலாக 4 நகராட்சிப் பகுதிகளை புதிதாக மாநகராட்சிகளாக மாற்றி, தற்போது மாநகராட்சிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**நகராட்சிகள்:**

தமிழ்நாட்டில் மொத்தம் 138 நகராட்சிகள் உள்ளன. நகராட்சிகள் மக்கள்தொகை மற்றும் வருமானத்தின் அடிப்படையில் 5 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. 10 கோடிக்கு மேல் வருமானம் உள்ள நகராட்சிகளை சிறப்புநிலை நகராட்சியாகவும், 6 கோடியிலிருந்து 10 கோடி வரை வருமானம் உள்ள நகராட்சிகளை தேர்வுநிலை நகராட்சியாகவும், 4 கோடியிலிருந்து 6 கோடி வரை வருமானம் உள்ள நகராட்சிகளை முதல்நிலை நகராட்சியாகவும், 4 கோடிக்குக் குறைவான வருமானம் உள்ள நகராட்சிகளை இரண்டாம் நிலை நகராட்சிகள் மற்றும் இன்னும் குறைவான வருமானம் உள்ள நகராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சிகள் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளன.

**பேரூராட்சிகள்:**

தமிழ்நாட்டில் 490 பேரூராட்சிகள் உள்ளன. அவைகளும், முறையே சிறப்புநிலை, தேர்வுநிலை, முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை என 4 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

**ஊராட்சிகள்:**

தமிழகத்தில் 500–க்கு மேல் மக்கள்தொகை கொண்ட 12,525 ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிகள் அனைத்தும் 388 ஊராட்சி ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இந்த 12,525

ஊராட்சிகள் 79,395 கிராமங்களை உள்ளடக்கியுள்ளன. 2011 மக்கள்தொகை கணக்குப்படி, 4.04 கோடி மக்கள் அதாவது 51.55% மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர்.

**ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு**

| எண் | ஊராட்சிகளின் வரம்பு | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 10 மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 2 | 11 முதல் 20 வரை | 80 |
| 3 | 21 முதல் 30 வரை | 82 |
| 4 | 31 முதல் 40 வரை | 83 |
| 5 | 41 முதல் 50 வரை | 66 |
| 6 | 50–க்கு மேல் | 54 |
| | மொத்தம் | 388 |

**மக்கள்தொகை மற்றும் வருவாய் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள்:**

| மக்கள் தொகை அடிப்படையில் | | | வருவாய் அடிப்படையில் | | |
|---|---|---|---|---|---|
| எண் | மக்கள் தொகை | எண்ணிக்கை | எண் | வருவாய் | எண்ணிக்கை |
| 1 | 500 – க்கு கீழ் | 46 | 1 | ரூ. 10 – 20 இலட்சம் | 6,440 |
| 2 | 501 – 1,000 | 833 | 2 | ரூ. 20 – 50 லட்சம் | 5,371 |
| 3 | 1,001 – 3,000 | 6,822 | 3 | ரூ. 50 இலட்சம் முதல் 1 கோடி | 605 |
| 4 | 3,001 – 5,000 | 2,781 | 4 | ரூ. 1 கோடிக்கும் மேல் | 109 |
| 5 | 5,001 – 10,000 | 1,753 | | | |
| 6 | 10,000 – க்கு மேல் | 290 | | | |
| | மொத்தம் | 12,525 | | | 12,525 |

**மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் துப்புரவு பணியாளர்கள்:**

உள்ளாட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய நிலைகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் நிரந்தர பணியாளர்களாகவும், ஒப்பந்த பணியாளர்களாகவும், தினக்கூலி



பணியாளராகவும், மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணியாற்றுபவர்களாகவும் உள்ளனர்.

**நிரந்தர பணியாளர்கள்:**

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புக்களில் மட்டுமே இவ்வகைப் பணியாளர்கள் உள்ளனர். இவற்றில் கடந்த 10 ஆண்டுகளாக, யாரையும் நிரந்தரப் பணியாளர்களாக பணியமர்த்தவில்லை. அதை அரசு கொள்கை முடிவாகவே கொண்டுள்ளது. ‘‘தனியார் நிறுவனங்களிடம் பணிகளை ஒப்படைத்தல்’’ என்ற ‘‘அவுட்சோர்சிங்’’ முறையில்தான் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக துப்புரவுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே, பணியமர்த்தப்பட்ட நிரந்தரப் பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்ட நாள் முதல் மாதம் குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 16,500 முதல் ரூ. 18,640 வரை பெறுகிறார்கள். கூடுதலாக, வருங்கால வைப்புநிதி, தொழிலாளர் காப்பீட்டுத்திட்டம், வீட்டுவாடகைப்படி, நகர்புறபடி, சலவைப்படி போன்றவையும் சட்டப்படி உறுதிசெய்யப்பட்டுள்ளன. 20 முதல் 30 ஆண்டுகள் வரை பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்கள் சட்டத்தின் அனைத்து பலன்களையும் பெறுவதால், குறைந்தபட்சம் ரூ. 45,000 வரை ஊதியமாக பெறுகிறார்கள். இவர்கள் ஒய்வுபெறும் போது, அவர்களின் பணிக்காலத்திற்கு ஏற்ப முறைப்படி பணிக்கொடை கணக்கிட்டு வழங்கப்படுகிறது. மாத ஒய்வூதியமும் நிறைவாகப் பெறுகின்றனர். இவர்களின் பணி நேரமும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. யாருக்கும் பயந்துகொண்டு, கொத்தடிமைகளைப் போல பணியாற்ற வேண்டிய அவசியமில்லை. நியாயமான ஊதியம் கிடைப்பதால், தங்கள் குடும்பத்தின் மீதும், குழந்தைகள் மீதும் தனிக்கவனம் செலுத்த முடிகிறது. குழந்தைகளை நன்கு படிக்க வைத்து, மதிப்புள்ள பணிகளுக்கு அனுப்ப முடிகிறது.

**ஒப்பந்த பணியாளர்கள்:**

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பெரும்பாலானோர் ஒப்பந்தப் பணியாளர்களாகவே இருக்கிறார்கள். பணிமர்த்தப்படும்போது மாத ஊதியமாக ரூ. 8,000 மட்டுமே இவர்களுக்கு வழங்கப்படுகிறது. தனியார் அமைப்புகளுடன் அரசு நிர்வாகம் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணியமர்த்தப்படும் இவர்களுக்கு, சட்டப்படி வழங்கப்பட வேண்டிய பல்வேறு உரிமைகள் மறுக்கப்படுவதால், கடுமையான உழைப்புச் சுரண்டல்களுக்கு ஆளாகின்றனர். அவர்களுக்கு நியாயமாக கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தில் பெரும்பகுதியை ஒப்பந்ததாரரே கொள்ளையடித்து விடுகின்றனர். பெரும்பாலான ஒப்பந்ததாரர்கள் அரசியலதிகாரமும்,

பணபலமும், சாதி ஆதிக்கமும் கொண்டவர்களாக இருக்கின்றனர். சட்டங்களை எளிதில் வளைத்துக் கொள்ளவும், அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து சரிகட்டும் வழிமுறைகளையும் நன்கு அறிந்திருக்கின்றனர். இதனால், ஒப்பந்தப் பணியாளர்கள், நிரந்தரமாகவே ஒப்பந்தப் பணியாளர்களாக இருக்க வேண்டிய நிலை நீடிக்கிறது. 15 அல்லது 20 ஆண்டுகள் தொடர்ந்து பணி செய்தும், பணி நிரந்தரம் என்பது அவர்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது. அப்போதைக்கப்போது இவர்களின் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுவதால், தொடர்ச்சியான பணி தடைபட்டு, சட்டத்தின் பலன்களை அவர்கள் பெறமுடியாமல் போகிறது. இதில் உள்ள சட்டமீறல்களை நன்கு அறிந்திருந்தும் அவற்றைக் களைய அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்க இதுவரை முன்வரவில்லை.

**தினக்கூலி பணியாளர்கள்:**

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றி வரும் நிரந்தரபணியாளர்கள் விடுமுறை எடுக்கின்ற போதும், அவசர காலங்களிலும், பேரிடர் மற்றும் பெருந்தொற்று நேரங்களிலும் தினக்கூலி பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு அன்றாடம் ரூ. 420 வழங்கப்படுகிறது. எல்லா நாட்களிலும் பணி உறுதி செய்யப்படவில்லை. இவர்களில் பலரும், 6 முதல் 15 ஆண்டுகள் வரை தொடர்ந்து பணிபுரிந்தும் தினக்கூலிகளாகவேத் தொடரும் கொடுமை. இவர்களின் பணிநேரமும் நிரந்தரபணியாளர்களின் பணிநேரமும் ஒன்றுதான். பணியளவும், நிரந்தர பணியாளர்களைப் போன்றே உள்ளது. ஆனால், பணியாற்றிய நாட்களை கணக்கிட்டு வழங்கப்படும் மிகக் குறைவான ஊதியத்தைத் தவிர வேறு எந்த பணிப்பலன்களும் இவர்களுக்கு கிடைப்பதில்லை.

**மகளிர் சுய உதவிகுழுக்கள் மூலம் நியமிக்கப்படும் பணியாளர்கள்:**

பெரும்பாலும் பேரூராட்சிகளில், இவ்வகைப் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் நிலையில், ஒரே குழுவின் மூலம் தொடர்ந்து பணிபுரிவதாக கணக்கில் கொள்ளப்படமாட்டார்கள். மாறாக, ஒவ்வொரு முறையும், ஏதாவது ஒரு குழுவின் பெயரில் பணி செய்வது போல ஆவணங்களில் காட்டப்படுவார்கள். இவர்கள் தொடர்ந்து பணியாற்றி வந்ததற்கான எந்தவித ஆதாரமும் இல்லாமல் போகும். இவர்களுக்கு ரூ. 6,000 முதல் ரூ. 8,000 வரை ஊதியம் வழங்கப்படுகிறது. இவர்களின் பணிநேரமும், பணி அளவும் நிரந்தரபணியாளர்களை விட கூடுதலாகவே இருக்கிறது. ஆனால், வழங்கப்படும் மிகக் குறைந்த ஊதியத்தைத் தவிர, வேறு எவ்வித சட்டரீதியான பலன்களும் இவர்களுக்கு கிடைப்பதில்லை.



# பகுதி 4

## துப்புரவுப்பணியாளர்களுக்கான சங்கங்கள் – ஒரு பார்வை

தமிழகத்தில் முதன்முதலில் சென்னையில் மாநகராட்சியில் பணியாற்றி வந்த தொழிலாளர்களுக்கு 1934–ல் கார்ப்பரேசன் லேபர் யூனியன் என்கிற சங்கம், **ஏஐடியுசி** எனப்படும் அகில இந்திய தொழிற்சங்கங்களின் சங்கமம் என்ற அமைப்பால் உருவாக்கப்பட்டது. அதுதான் துப்புரவுப் பணியாளர்களுக்காக தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட முதல் சங்கமாகும். இந்த சங்கம் முதன்முதலாக, 8 மணி நேர வேலை, வேலைக்கேற்ற ஊதியம், பணிப்பாதுகாப்பு போன்ற 15 முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து, 1946 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. 22 நாட்கள் நீடித்த அந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் விளைவாக, அந்தத் தொழிலாளர்களின் மாத ஊதியம் ரூ. 6–லிருந்து 15 ஆக உயர்த்தப்பட்டது. மேலும், சீருடைகள் வழங்கப்பட்டன. வீட்டு வாடகை, அசுத்த அலவன்ஸ், வார விடுமுறை போன்றவை உறுதி செய்யப்பட்டன.

**போராட்டமும், துப்புரவுப் பணியாளர்களுக்கான முதல் அரசாணையும்:**

முந்தைய போரட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் பல. ஆனால், அவற்றில் ஒரு சிலவற்றை மட்டுமே அரசு ஏற்றுக்கொண்டது. எனவே, இதர உரிமைகளுக்காக மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. உள்ளாட்சித் துப்புரவு தொழிலாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கான அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த முறை முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கை. துப்புரவுப் பணியாளர்கள் அரசின் நான்காம் நிலை ஊழியர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளும் அந்தப் போராட்டத்தில் முன் வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1972 மற்றும் 1973 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் வேலை நிறுத்தம் நடத்த திட்டமிட்டபோது, வேறுவழியின்றி, தமிழ்நாடு அரசு தொழிலாளர்களின் பிரச்சினைகளைக் கேட்க முன்வந்தது. தொழிற்சங்க தலைவர்களை அழைத்து நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில், 01.10.1973 தேதியிட்ட அரசாணை எண்: 2469

வெளியிடப்பட்டது. உள்ளாட்சி துறை துப்புரவு பணியாளர்களுக்காக வெளிவந்த முதலாவது அரசாணை இதுதான்.

அதன்படி, உள்ளாட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்பட்டு அடிப்படை சம்பளம் ரூபாய். 100 மற்றும் சில உரிமைகளும், காலமுறை ஊதியமும் (டைம் ஸ்கேல்) வழங்கப்பட்டது. அதன்பிறகு, 1978 – ல் மூன்றாவது ஊதியக்குழு ரூபாய் 100 என்ற அடிப்படை சம்பளத்தை 200 ஆக உயர்த்தியது. ஆனால், அக்குழு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியமான ரூ. 250 கூட வழங்கவில்லை. மேலும், அரசின் நான்காம் நிலை ஊழியர்களாக துப்புரவுப் பணியாளர்களை ஏற்க மறுத்து அநியாயம் செய்தது.

**எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த காலகட்டத்தில்:**

பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்டவாறு கோரிக்கைகளை நிறைவேற்றாததால், 08.04.1983 அன்று மாநிலம் தழுவிய வேலை நிறுத்தம் செய்ய முடிவாகி அரசுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது. அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்க மறுத்தார். மீனவ நண்பன், விவசாயி, ரிக்ஷாகாரன் போன்ற படங்களில் நடித்த அந்த நடிக முதல்வர் தொழிலாளர்களுக்கே சவால் விட்டார். தொழிலாளர்களும் நேருக்கு நேர் நெஞ்சுறுதியுடன் சவால் விட்டனர். போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்பதில் உறுதியாக இருந்தார்கள். இறுதியில், அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. பலமணி நேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், முக்கியமான 9 கோரிக்கைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதில் மிகவும் முக்கியமானது, தமிழக அரசின் நான்காம் நிலை ஊழியர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் என்பதாகும். பேச்சுவார்த்தை அடிப்படையில் அரசாணை எண் 597, நாள்: 12.04.1983 வெளியிடப்பட்டது. ஆனால், எப்போதும் போலவே, நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**துப்புரவுப் பணியாளர்கள் அனைவருக்கும் ஒரே சம்பளம்:**

மீண்டும் 24.01.1985–ல் ஊதியக்குழுவிடம் தமிழ்நாட்டில் இருந்த 540 சங்கங்கள் கோரிக்கை மனு கொடுத்தன. அதில் உள்ளாட்சி துப்புரவு தொழிலாளர்களுக்காக ஏஐடியுசி மட்டும் மனு கொடுத்தது. அதன் பலனாக,



15 ரூபாய் சம்பளம் என்ற தலையெழுத்து மாறி ரூபாய் 900 வரை சம்பளம் பெறும் நிலைக்கு உயர்ந்தனர். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் வெவ்வேறு சம்பளம் என்ற நிலைமாறி எல்லோருக்கும் ஒரே சம்பளம் என்ற நடைமுறை வந்தது. இது துப்புரவுப் பணியாளர்களுக்கான சங்கங்கள் சாதித்த பெரும் சாதனைகளாகும். காலம் செல்லச் செல்ல சங்கங்கள் வலுவிழந்தன. வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. அனைத்து நியாயமான உரிமைகளும் மறுக்கப்பட்ட தொழிலாளர்களாக துப்புரவுப் பணியாளர்கள் இன்று நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்மையான சங்கங்கள் களமிறங்க வேண்டும். குறிப்பாக, இத்தொழிலாளர்கள் தங்களுக்கான சங்கங்களை தாங்களே கட்டமைத்தாக வேண்டும். அதுவே தங்களின் பிரச்சினைகளுக்கு தாங்களே குரல் கொடுக்கும் வாய்ப்பை அவர்களுக்கு பெற்றுத்தரும்.

**துப்புரவுப் பணியில் ஒப்பந்த முறை என்ற மோசடி:**

1991–களில் அறிமுகப்படுத்தப்பட்ட உலகமயமாதல், தனியார்மயமாதல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகளின் காரணமாக 1991 நவம்பர் 1–ஆம் தேதி முதல் துப்புரவு பணிகளை தனியார் வசம் ஒப்படைக்க அன்றைய தமிழக அரசு முடிவெடுத்தது. சென்னை மாநகராட்சி 2000–ஆம் ஆண்டு மே மாதத்தில்தான், சுகாதாரப் பணிகளை முதன்முதலில், தனியாரிடம் தாரைவார்த்துக் கொடுத்தது. அப்பொழுது, அன்றைக்கிருந்த 10 மண்டலங்களில் மூன்று மண்டலங்களில் மட்டும் இப்பணிகளை நிறைவேற்ற ஆண்டுக்கு ரூபாய் 24 கோடியே இருபத்தி ஆறு இலட்சத்திற்கு சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனம் மாநகராட்சி நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. மாத ஊதியம், அகவிலைப்படி மற்றும் இதர படிகள், ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப பாதுகாப்பு நிதி, குடும்ப ஓய்வூதியம், சீருடை போன்ற சட்ட உரிமைகளை அனைத்து தொழிலாளர்களுக்கும் உறுதிசெய்து வழங்கினாலும், ஆண்டுக்கு 26 கோடியே 43 லட்சம் மட்டுமே செலவு பிடிக்கும். ஆனால், தனியார் நிறுவனத்திடம் ஒப்படைப்பதால், ஆண்டுக்கு ரூபாய் 2 கோடியே 17 லட்சம் மிச்சம் ஆவதாகக் கூறி பரப்புரை செய்தது மாநகராட்சி நிர்வாகம். ஒப்பந்தம் பெற்ற சிங்கப்பூர் நிறுவனமோ, ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 2,500 மட்டுமே ஊதியம் வழங்கியது. சட்டப்படி வழங்க வேண்டிய ஏனைய உரிமைகளை மறுத்தது, இவ்வாறு ஒப்பந்தம் எடுத்த நிறுவனம் ஆண்டுக்கு ரூ.15 கோடிக்கு மேல் லாபம் ஈட்டியது. அதே காலகட்டத்தில் அம்பத்தூர்

நகராட்சித் தொழிலாளர்கள் மிகவும் விழிப்பாயிருந்ததால், அங்கு கொண்டு வரப்பட்ட ஒப்பந்த முறையைப் போராடி தடுத்து நிறுத்தினர். ஆனால் இன்று தமிழகம் எங்கும் ஒப்பந்தமுறையே நடைமுறையாகி விட்டது. தொழிலாளர்கள் உரிமைகளை மட்டும் இழக்கவில்லை, உணர்வையும் இழந்துள்ளனர்.

**சட்ட மீறல்களுக்கு வழிவகுத்துள்ள ஒப்பந்த பணிகள்**

தொழிலாளர்களை நிரந்தரமாக்கி, காலிப்பணியிடங்களை நிரப்பி தேவையான எண்ணிக்கையில் தொழிலாளர்களை பணிக்கமர்த்தி, அரசின் ஊதியக்குழு நிர்ணயிக்கும் ஊதியமும், இன்னபிற உரிமைகளையும் தொழிலாளர்களுக்கு சட்டப்படி வழங்கினால், ஆகும் செலவை விட ஒப்பந்த முறைக்காக அரசு நிர்வாகம் கூடுதலாகத்தான் செலவு செய்கிறது. இதன்மூலம் தொழிலாளர்கள் கடுமையாக வஞ்சிக்கப்படுகிறார்கள். ஒப்பந்தகாரர்கள் கொள்ளை இலாபம் அடைகிறார்கள். பல ஆய்வுகள் இதை உணர்த்தியுள்ளன. ஆனால், அரசோ ஒப்பந்த அடிப்படையில் வெளிச்சந்தையில் இந்தப் பணிகளை விற்பனை செய்வதையே தனது கொள்கை முடிவாகக் கொண்டுள்ளது. தொழிலாளர்களின் சட்ட விழிப்புணர்வும் ஒருமித்த போராட்டமுமே இத்தகைய மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

**ஒப்பந்தப் பணியாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி:**

ஊதியத்தை இரண்டு மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை வழங்காமல் இழுத்தடிப்பது அப்பட்டமான வன்முறையாகும். சட்டப்படியான இ.பி.எஃப், இ.எஸ்.ஐ திட்டங்களுக்கு தொழிலாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யும் தொகையை உரிய நிறுவனத்தில் செலுத்தும் வழக்கமே பல ஒப்பந்தகாரர்களிடம் இல்லை. இதனால், மருத்துவ காப்பீட்டு திட்டமான இஎஸ்ஐக்கும், இபிஎஃப்க்கும் சந்தா செலுத்திவிட்டு பலனை அடைய முடியாமல் தொழிலாளர்களும், அவர்கள் குடும்பமும் தவிக்கின்றன.

**தேவையான பணியாளர்களை பணியமர்த்தாமல் கொள்ளை:**

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களை பணியமர்த்துவதாக ஒப்பந்தம் போட்டுவிட்டு, குறைவான தொழிலாளர்களை மட்டும் ஒப்பந்தக்காரர்கள் பணியிலமர்த்தி, பெரும் கொள்ளையடிக்கின்றனர். இந்த வகைகளில் மட்டும் குறைந்தபட்சம் தமிழ்நாட்டில் ஆண்டுக்கு சுமார்



ரூ.2,000 கோடிக்கு மேல் ஒப்பந்ததாரர்கள் முறைகேடு செய்து கொள்ளையடிப்பதாக புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு திருடுவதற்கு அரசு சேவைக்கட்டணமும் வழங்குகிறது. இவையாவும் சட்டத்திற்குப் புறம்பான குற்ற நடவடிக்கைகளாகும். ஒப்பந்தகாரர்களின் சட்டமீறல்களுக்கு அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். இது ஒரு கூட்டுக்கொள்ளையாகவே பார்க்கப்படுகிறது.

**இன்றைய சூழலில் சங்கங்களும், போராட்டங்களும்:**

சங்கங்கள் துடிப்புடன் செயல்பட்டது பழைய கதை. மறுபக்கம், இப்பணியாளர்கள் தங்களது நியாயமான உரிமைகளை பெறுவதற்காக நம்பிக்கையோடு பல தொழிற்சங்கங்களில் அங்கத்தினர்களாகி வருகின்றனர். அவற்றின் வழியாக, சில போராட்டங்களையும் முன்னெடுக்கின்றனர். பல வழக்குகளையும் நீதிமன்றங்களில் தொடுக்கின்றனர். ஆனால், பல்வேறு காரணங்களினால் அவர்களின் முயற்சிகள் பெரும் பலனளிக்கவில்லை. சங்கடங்கள் தீரவில்லை. நீதிமன்றங்களும் இப்பிரச்சினைகளில் கூடுதல் கவனம் செலுத்தத் தவறி விடுகின்றன. குறிப்பிட்ட சில நீதிபதிகளிடம் மட்டுமே இத்தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்த அக்கறையைப் பார்க்க முடிகிறது. பெரும்பாலான நீதிபதிகள் இப்பணியாளர்கள் தொடர்பான வழக்குகளை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. தொழிலாளர்கள் விழிப்பாயிருந்து தங்கள் சங்கடங்களையும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் அறிந்து தாங்களே தங்களுக்கான சங்கங்களைக் கட்டமைத்து உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். அதுவே சரியான வழிமுறையாக இருக்க முடியும்.

# பகுதி 5

## தூய்மைக் காவலர்கள்

துப்புரவுப் பணியாளர்களின் சங்கடங்கள் ஏராளமிருக்க, அவற்றை சட்டரீதியாகத் தீர்ப்பதற்கான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளாமலேயே, துப்புரவுப்பணிகளில் ஒரு உப பணியாக இருக்கும், ''குப்பை சேகரிக்கும் பணி'' யை மட்டும் தனியாகப் பிரித்து, அவற்றைச் செய்வதற்கென்றே, மாநிலம் முழுவதும் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் 66,025 பணியாளர்களைத் ''**தூய்மைக் காவலர்கள்**'' என்ற பெயரில் நியமித்துள்ளது உள்ளாட்சி நிர்வாகம். வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்து, வண்டியில் ஏற்றி உரிய இடத்திற்கு கொண்டு வந்த பின்பு, அதனை தரம் பிரித்து, மறு சுழற்சி, மறு பயன்பாட்டிற்கு அனுப்புவது இவர்களின் பணியாகும். இவர்களின் பணி நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஆனால், அந்தந்த ஊராட்சிகளில், சாதி பார்த்து இவர்களை சாதிய வன்மத்தோடு நடத்துகின்ற போக்கு இருப்பதை தூய்மைக் காவலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**மிகக்குறைவான ஊதியமும், பணிப்பாதுகாப்பற்ற சூழலும்:**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் குறைந்தது 100 நாட்கள் பணியாற்றியவர்களை அடையாளங்கண்டு இந்தப் பணிக்கு அமர்த்துவதற்கான நடைமுறை விதிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவர்களின் பணிகளையும் கண்காணிப்பதற்கு 100 வேலை திட்டத்தை பராமரிக்கும் நபரையே நியமித்துள்ளனர். கிராமப் பகுதிகளில் 150 வீடுகளுக்கு ஒருவர் வீதம் கணக்கிடப்பட்டு இப்பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களின் மாத ஊதியம் முதலில் ரூ. 2,600 என்று நிர்ணயிக்கப்பட்டு, பிறகு அது ரூ. 3,600 ஆக உயர்த்தப்பட்டு 2023 ஆம் ஆண்டு முதல் ரூ. 5,000 என உயர்த்தி வழங்கப்படுகிறது. இப்பணியாளர்கள் அனைவரும் மதிப்பூதியம் பெறுபவர்களாகவே கருதப்படுகின்றனர். மாத ஊதியத்தை கிராம ஊராட்சிகள் நேரடியாக செலுத்தாமல், அந்தத் தொகையை ஒவ்வொரு மாதமும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கணக்குக்கு செலுத்திவிட வேண்டும் என்றும், தொடர்புடைய சங்கம் பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள் ஊதியத்தை பணியாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்திடவும் வழிவகை



செய்யப்பட்டுள்ளது. எனவே, ஊதியம் வழங்குவதில் எந்தவொரு முறைகேடும் இல்லாமல் தடுக்கப்பட்டுள்ளது.

முதன்முதலில் இவர்கள் பணியமர்த்தப்பட்ட போது, வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ், நலிவுற்ற பிரிவினரை கண்டறிந்து அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்ற அடிப்படையில் இந்தப் பணி வழங்கப்பட்டது. இப்பணியாளர்கள் தொடர்ந்து 8 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி வரும் சூழலில், அவர்களின் பணியும் ஒழுங்குபடுத்தப்படாத பணியாகவே உள்ளது. எந்த நேரத்திலும் அவர்கள் நிறுத்தப்படலாம் என்பதால், பணிப்பாதுகாப்பற்ற சூழலே நிலவுகிறது.

**பிற்படுத்தப்பட்ட சாதிகளும் தூய்மைக் காவலர்களாக!:**

கிராமங்களில் நிலவும் வறுமை மற்றும் வேலையில்லா நிலை காரணமாக, தூய்மைக் காவலர் பணிகளைச் செய்வதற்கு பல பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களும் முன் வந்துள்ளனர். ஒரு வகையில், துப்புரவு செய்வதும், குப்பைகளை அள்ளுவதும் ஒரு குறிப்பிட்ட பட்டியலினத்தைச் சார்ந்தவர்களுக்குரியது என்ற சமூகக்கறையை இது போக்குவதாக உள்ளது. மேலும், வறுமை ஒழிப்பு என்பதை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பணிக்கு பெண்களை மட்டுமே பணியமர்த்தியுள்ளனர். இது வரவேற்கத்தக்கது. ஆனால், 2015 ஆம் ஆண்டு பணியமர்த்தப்பட்ட இவர்களுடைய பணி குறித்த எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. பல ஆண்டுகள் பணியாற்றியுள்ள நிலையில் இவர்களின் பணி ஒழுங்குபடுத்தப்பட்டு, முழு நேரப் பணியாளர்களாக கூடுதல் பணிகளும் வழங்கப்பட்டு, அரசு ஊழியர் என்ற நிலைக்கு இவர்கள் உயர்த்தப்படும்போதுதான், ஒரு தொழிலாளருக்குரிய அனைத்து சட்ட உரிமைகளையும் பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாக ஆவார்கள்.

**பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகள்:**

1. கிராம ஊராட்சிகளில் பணி புரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்களின் வேலை நேரத்தை வரையறுத்து, முழுநேர பணி வழங்கி, அனைவரையும் முழுநேர அரசு ஊழியர்களாக அறிவித்து காலமுறை ஊதியத்தை உறுதிசெய்திட வேண்டும். அவர்கள் ஏனைய அரசு ஊழியர்களைப் போல அனைத்துவிதமான பணிப்பலன்களை பெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

2. அனைத்து ஊராட்சிகளிலும் மக்கள்தொகை அடிப்படையில் போதிய அளவு தூய்மைப் பணியாளர்களும், தூய்மைக் காவலர்களும் பணியமர்த்தப்பட வேண்டும். அப்போதுதான், இவர்கள் பணிச்சுமையும், மன அழுத்தமும் இன்றி பணியாற்ற முடியும். தூய்மைப் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு தடையாக இருக்கின்ற அரசாணைகளை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் இணையதள பக்கத்தில் ஊராட்சிகளில் பணியாற்றுகின்ற அனைத்து தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்களின் பட்டியலை வெளியிட்டு, அவர்களின் பணியமர்வு மற்றும் பணிநிலை தொடர்பான விவரங்களையும் வெளியிட வேண்டும்.

4. ஊதியத்தை கணக்கிடுவதில் அனைத்து தொழிலாளர்களுக்கும் நியாயம் கிடைக்கும் விதத்தில், அரசாணைகளின் அடிப்படையில் அந்தந்த காலகட்டத்தில் ஒவ்வொரு பணியாளரையும் அவர் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள் கணக்கிட்டு, காலமுறை ஊதியம் பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாக அறிவிக்க வேண்டும். மேலும், அவர்களுக்குரிய ஊதியத்தையும், நிலுவைத்தொகையையும் துல்லியமாக சட்ட நடைமுறை விதிகள் அடிப்படையில் கணக்கிட்டு உடனடியாக வழங்க வேண்டும்.

5. பணியிடங்களில் பணியாளர்களின் மாண்புக்கும் மரியாதைக்கும் கேடு விளைவிப்போர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு அதிகாரப்பூர்வமாக வெளியிட வேண்டும்.

6. துப்புரவுப் பணியாளர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கப்பட்ட நடைமுறை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

7. பணியாளர்களுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறையாவது மருத்துவ பரிசோதனை கட்டாயம் செய்யப்பட வேண்டும். அதற்குரிய ஏற்பாட்டை உள்ளாட்சி நிர்வாகம் உடனடியாக செய்ய வேண்டும்.



# பகுதி 6

## சாதி ஒழிப்பும் சமூகநீதியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்!

துப்புரவுப் பணிசெய்வோருக்கு எதிரான சாதிக்கொடுமைகள் நிகழாத நாட்களே இல்லை. 1950 முதல் நடைமுறைக்கு வந்த புதிய இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் சாதிரீதியானத் தீண்டாமை ஒழிந்துவிட்டதாக பறைசாற்றினாலும், அது இன்றுவரை வெறுமனே ஏட்டளவில்தான் இருக்கிறது. விடுதலை பெற்ற இந்தியாவில் அமைந்த அரசுகள் சாதியை ஒழிக்க இன்றுவரை எந்தவொரு தீர்க்கமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சாதிக்கொடுமைகளைத் தடுத்து நிறுத்த பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால், அவற்றால் பெரிய அளவில் பயன் ஏதும் விளையவில்லை. சாதி மனிதகுலத்துக்கும், அறிவியலுக்கும், இயற்கைக்கும் எதிரானது என்பதையும், ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் பெருங்கேடு விளைவிப்பது என்பதையும் சிறு வயது முதலே குழந்தைகளுக்குக் கற்றுத்தர தவறிவிட்டது அரசு. பொறுப்பற்ற, சுயநலமிக்க, சாதிவெறி பிடித்த ஆட்சியாளர்களே அதற்கு காரணம். சாதியை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகாரத்தில் இருந்தவர்களிடமும், இருப்பவர்களிடமும் இதுவரை எழவில்லையே! சாதி எப்படி ஒழியும்? சாதியப் பாகுபாடுகளைக் களைந்து வன்கொடுமைகளைத் தடுக்கவும், சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வளர்த்தெடுக்கவும் அரசு நேரடியான தீவிர நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே நீடித்த, ஒருங்கிணைந்த, எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இந்தியா அடைய முடியும். மனித மனங்களில் மாற்றங்களைக் கொண்டு வர, அறிவியல்பூர்வமான அணுகுமுறையை ஆரம்பக் கல்வி முதல் எல்லா நிலைகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் மட்டும்தான் சாதியப் பாகுபாடுகளை அடுத்த 2 அல்லது 3 தலைமுறைகளில் ஓரளவுக்காவது கட்டுப்படுத்த முடியும். அதன் பிறகுதான் சாதி ஒழிப்புக்கான வழி பிறக்கும்.

**துப்புரவுப் பணியில் பெண்களும், கடைநிலைச் சாதியினரும்**:

வீட்டிலும், நாட்டிலும் மனிதர்கள் உயிர் வாழ துப்புரவுப் பணி மிகவும் இன்றியமையாதது. இது ஒரு அத்தியாவசியப்பணி என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மேலோட்டமாகப் பார்த்தால், துப்புரவு என்பது ‘‘சுத்தம்

செய்தல்'' என்றறியப்பட்டு, அது ஒரு மிகச் சாதாரண பணியாகவே கருதப்படுகிறது. ஆனால், வீட்டிற்குள்ளும், வெளியிலும் செய்யப்படும் துப்புரவுப் பணிகளை உற்றுநோக்கினால்தான், அவற்றில் அடங்கியுள்ள அசுத்தம், துர்நாற்றம், அவமானம், இழிவு, சுகாதாரக்கேடு போன்ற ஆபத்துக்களை புரிந்துகொள்ள முடியும். இந்தியாவில் நிலைபெற்றுள்ள சாதி இந்நாட்டை ஒரு ஆணாதிக்கச் சமூகமாகவே இன்றுவரை நிலைநிறுத்தியுள்ளது. சாதிரீதியாக, தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படும் பெண்களே வீட்டிற்குள் அசுத்தமும், துர்நாற்றமும் நிறைந்த துப்புரவுப் பணிகளைச் செய்ய வேண்டிய கொடுமை. அதேபோல, சாதியப் படிநிலையில், நான்கு வர்ணத்திற்குப் புறம்பாக, அவர்ணர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும் நிலைநிறுத்தப்பட்டுள்ள கடைநிலை சாதியினரே நாம் வாழும் சமூகத்திலும் அசிங்கமும், துர்நாற்றமும், இழிவும் நிறைந்த துப்புரவுப் பணிகளைச் செய்யும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதிலும் கூட, பெண்கள்தான் பெரும் எண்ணிக்கையில் இந்த இழிவான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

**அனைவருக்கும் அடிப்படை சுகாதார வசதி என்பது கானல்நீர்!**

நமது நாடு வளர்ச்சி பெற்ற நாடு அல்ல. சீரான வளர்ச்சி, சமமான வளர்ச்சி, நீடித்த வளர்ச்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதை எட்டுவதற்கு இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. அவை குறித்த சர்வதேச குறியீடுகளில் இந்தியா மிகவும் பின்தங்கி பலவற்றில் ஏறக்குறைய கடைசி இடத்திற்கு தள்ளப்படுகிறது. வெறுமனே நாடு வளருகிறது என்று தம்பட்டம் அடிப்பது வெற்றுக்கோஷம் என்பதை நாடே அறிந்து வருகிறது. நம் நாட்டில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களே தரமான நவீன அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள். 70 சதவீதத்திற்கும் அதிகமான மக்களுக்கு இன்னும் முழுமையான தரமான அடிப்படை வசதிகள் சென்றடையவில்லை. இன்றும் பெருநகரங்களில்கூட, மனிதக் கழிவுகளை சுகாதாரமாக நவீன முறையில் அகற்றுவதற்கான தொழில்நுட்பம் புகுத்தப்படவில்லை. பெரும்பாலும், மனிதர்களே அவற்றை செய்ய வேண்டிய கொடுமை நீடிக்கிறது. நாட்டில் ஆகப்பெரும்பான்மை மக்களுக்கு கழிவறைகளே இல்லை. திறந்தவெளியில் கழிப்பது என்பது இந்தியாவின் சமூக எதார்த்தம். பொதுக்கழிவறைகள் நவீனப்படுத்தப்படாமல், பெரும் சுகாதாரக் கேட்டினை விளைவிக்கின்றன. அரசின், ''தூய்மை இந்தியா'' திட்டம், ''எல்லோருக்கும் கழிவறை'' போன்ற திட்டங்களில்,



அறிவியல்பூர்வமான அணுகுமுறை இல்லாததால், அவை முற்றிலும் தோல்வியடைந்துவிட்டன. ஆட்சியாளர்கள் அந்த தோல்வியை ஒப்புக்கொள்ளவும், இந்த எதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளவும் மறுக்கின்றனர்.

**சாதிவாரி கணக்கெடுப்பின் அவசியம்:**

சாதிவாரி கணக்கெடுப்பு ஒன்றே சமூகநீதிக்கு வித்திடும் என்பதை நாடு உணரத் தொடங்கியுள்ளது. இந்தியாவில், முதல்முறையாக மக்கள்தொகை கணக்கெடுப்பு 1881 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அது முதல் ஒவ்வொரு பத்தாண்டு இடைவெளியிலும் 1931 ஆம் ஆண்டுவரை எடுக்கப்பட்ட எல்லா கணக்கெடுப்புகளும் சாதியையும் உள்ளடக்கியதாக இருந்தது. இந்திய விடுதலைக்குப் பின் முதன்முதலாக 1951 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்போது, சூழ்ச்சியுடன் சாதி குறித்த கணக்கெடுப்பு கைவிடப்பட்டது. ஆனால், பட்டியல் பிரிவில் இருந்த 1,234 சாதிகள் மற்றும் பழங்குடியினர் பிரிவில் இருந்த 698 வகுப்புகள் குறித்த கணக்கெடுப்பு மட்டும் உள்ளடக்கப்பட்டது. அதன்பிறகு, வந்த ஆட்சியாளர்கள் கணக்கெடுப்பே நடத்தாமல் சதி செய்தனர். 1951–க்கு பிறகு, இந்தியாவில் முறையான கணக்கெடுப்பு நடத்தாமல் பெரும்பான்மை மக்களுக்கு தொடர்ந்து அநீதி இழைக்கப்படுகிறது. கடைசியாக, 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் சாதி குறித்த கணக்கெடுப்பும் உள்ளடக்கப்பட்டது. அது பல அரிய உண்மைகளை வெளிக்கொண்டுவந்துவிடும் என்பதால், மீண்டும் ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கமும் மிகுந்த சூழ்ச்சியுடன் பல்வேறு குளறுபடிகளைச் செய்து அதை வீணடித்து விட்டனர். அதன் விளைவாக, அறிவியல்பூர்வமான சாதி குறித்த புள்ளிவிவரங்கள் இன்றுவரை கிடைக்கவில்லை. சாதி குறித்த கணக்கெடுப்பு சமூகநீதிக்கான அடிப்படை அலகு. தற்போது மீண்டும் அதற்கான குரல் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளது. அதுவே, 2024 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் முக்கிய பிரச்சினையாகவும் முன்வைக்கப்பட்டது. சமூகநீதிக் கொள்கையில் உறுதியுடன் உள்ள எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தில் சாதிவாரிக் கணக்கெடுப்பை உடனே நடத்தச் சொல்லி குரல் கொடுத்து வருகின்றன. இங்கு பெரும்பான்மை மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்றால், சாதி குறித்த அறிவியல்பூர்வமான கணக்கெடுப்பும், அதன் அடிப்படையிலான கூர்மையான திட்டங்களும் அவசியம். அப்படிப்பட்ட அணுகுமுறை மட்டுமே நாட்டில் உள்ள பெரும்பான்மை மக்களுக்கு சமூகநீதியை உறுதிசெய்யும்.

மேற்சொன்ன 1951 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் அடிப்படையில், இந்தியாவில், 1,234 சாதிகள் பட்டியலின சாதிகளாக அடையாளங்காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும், அந்தப் பட்டியலில் உள்ள கடைநிலை சாதியினரே அசுத்தமான, துர்நாற்றம் வீசக்கூடிய, துப்புரவுத் தொழிலாகிய இழிதொழிலை செய்வதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில், இத்தொழிலில், பட்டியலினத்தைச் சார்ந்த அருந்ததியர்களே 80 சதவீதத்தினருக்கு மேல் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களிலும் பெண்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதோடு, அவர்கள் அன்றாடம், ஆபத்தான கழிவுகளை அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்களில் பெரும் பகுதியினர் சில தலைமுறைகளாகவே இந்த இழிதொழிலைச் செய்து வரும் நிலையை மறுக்க முடியாது. இவர்களோடு, காட்டு நாயக்கர், குறவர் போன்ற சில பழங்குடியினத்தவரும், இதர பட்டியலினத்தவரும் குறைவான எண்ணிக்கையில் இந்த இழிதொழிலைச் செய்து வருவதைக் காண முடிகிறது. தமிழ்நாட்டைப் போலவே, ஒவ்வொரு மாநிலத்திலும், பட்டியலினச் சாதிகளில் கடைநிலைச் சாதியைச் சார்ந்தவர்களே இந்த இழிதொழிலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாநிலத்திலும், அவர்கள் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இந்தப் பணியை செய்வோர் பெரும்பாலும். எழுதப்படிக்க அறியாதவர்களாக இருப்பது மற்றொரு எதார்த்தம். அதனால், இவர்களுக்கு சட்டப்படி நியாயம் வழங்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கோ, அரசு அதிகாரிகளுக்கோ வருவதில்லை. இத்தகைய காரணங்களால், இவர்களின் ஊதியம் உள்ளிட்ட பணி தொடர்பான எதுவும் ஒழுங்குபடுத்தப்படாமலும், பணி நடைமுறை விதிகள் கடைப்பிடிக்கப்படாமலும், மிகவும் குறைவான ஊதியத்திற்கு காலங்காலமாக, பணி வழங்கும் அமைப்புக்கு பயந்துகொண்டு கொத்தடிமைகளைப் போல பணியாற்ற வேண்டிய அவலநிலை தொடர்கிறது. வேலையின்மை அதன் உச்சத்தில் இருக்கும் இன்றைய காலக்கட்டத்தில், மேற்சொன்ன சமூகங்களைச் சார்ந்தவர்களில் பலரும், இந்தப் பணியாவது தங்களுக்கு கிடைக்காதா என்று காத்திருக்கும் அவலம்.

**தொழிலாளர்கள் இந்தப் பணியில் தொடர காரணம்:**

“என்றாவது ஒருநாள், தாங்களும் நிரந்தரப் பணியாளராக ஆக்கப்படுவோம்” என்ற நம்பிக்கையில் மிகுந்த எதிர்பார்ப்போடு, தங்களுக்கு பணி வழங்கிய அமைப்பில் அடிமைகளைப் போல எசமானர்கள் சொல்லுகின்ற



அனைத்துவகைப் பணிகளையும் மனமுவந்து ஏற்று செய்து வருகின்றனர். பணி வரையறையோ, பணி நேரமோ, பணி உத்தரவாதமோ இல்லாததால், ஊராட்சி மன்றத்தலைவர் மற்றும் செயலரின் வீட்டு வேலைக்காரர்களாகவும் நடத்தப்படும் கொடுமை. மிக நீண்டகாலமாக இந்தப் பணியை தொடர்ந்து செய்து வந்தபோதிலும், மற்ற அரசுத் துறைகளில் ஏனைய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற ஊதிய உயர்வோ, சிறப்புப் படிகளோ, அகவிலைப்படியோ இல்லாமல் அதிகபட்சம் ரூ. 8,000 மட்டுமே மாத ஊதியம் பெறுபவர்களாக உள்ளனர். அந்த ஊதியமும் மற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாளில் முறையாக வழங்கப்படுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், நிதிப் பற்றாக்குறை என்று சொல்லி பலருக்கு பல மாதங்கள் ஊதியம் வழங்காமலேயே சில ஊராட்சிகள் இப்பணியாளர்களை துன்புறுத்துகின்றன.

**நிரந்தரப் பணி என்பது கானல்நீர்:**

நிரந்தர பணியாளர் என்பது மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புக்களில் மட்டுமே சாத்தியமாகும். கிராம ஊராட்சிகளில் தொடக்கத்திலிருந்தே, “**பணி நிரந்தரம்**” என்ற பேச்சுக்கே இடமில்லை. ஊராட்சி மன்றத் தலைவரோ, அவரின் செயலரோ எந்தவொரு தூய்மைப் பணியாளரையும் எப்போது வேண்டுமானாலும், பணியிலிருந்து நீக்க முடியும் என்ற நிலைதான் உள்ளது. இதனால், ஒவ்வொரு நாளும் தங்களது எசமானர்கள் எப்போது தங்களை பணிநீக்கம் செய்து விடுவார்களோ என்று பயந்து பணிசெய்யும் கொடுமை.

இப்போதெல்லாம் ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் அரசுப்பணிகளில் யாரையும் அமர்த்தாமல், இருக்கின்ற காலி பணியிடங்களில் ‘அவுட் சோர்ஸிங்’ முறை மூலம் வெளிச்சந்தையில், ஒப்பந்த அடிப்படையிலேயே பணியாளர்களை பணிமர்த்தி வருகின்றன. ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் 30 இலட்சத்திற்கும் மேலான காலி பணியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமலே உள்ளன. இரயில்வே துறையில் மட்டும் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட பணியிடங்கள் காலியாகவே உள்ளன. அரசுகள் ஒப்பந்த முறையை முற்றிலும் ஒழித்துவிட்டு அனைத்துத் துறைகளிலும் நேரடியாக பணியாளர்களை பணியமர்த்தினால் மட்டுமே நாடு வளர்ச்சியடையும். தொழிலாளர்களும் ஓரளவுக்கு நிம்மதியாக வாழ முடியும்.

# பகுதி 7

## பிற்சேர்க்கை - I

### தமிழ்நாடு ஆதித்திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO)

வறுமையில் உழலும் பட்டியலின மக்கள் வறுமை காரணமாக அவசரத் தேவைகளுக்காக கடன் வழங்கும் தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களிடம் அபரிமிதமான வட்டிக்கு கடன் பெறுகின்றனர். அதுவே நாளடைவில் பழக்கமாக மாறிவிடுகிறது. இதனால், தாங்கள் உழைத்து சம்பாதிக்கும் பணம் முழுவதையும் வட்டிகட்டியும், இருக்கின்ற நகை, சொத்துக்களை விற்றும் மோசம் போகிறார்கள். இவற்றைத் தடுப்பதற்கு, அரசே மானியத்துடன் கடன் வழங்கும் ஏற்பாடுதான் 'தாட்கோ' கடன் வழங்கும் திட்டம். பட்டியலின மற்றும் பட்டியல் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்கள் சுயமாக தொழில் தொடங்க கடன் வழங்கும் திட்டம்தான் இது. அப்படி வழங்கப்படும் கடன்களுக்கு 30 முதல் 50 சதவீதம் வரை மானியம் என்பது இதன் சிறப்பம்சமாகும். தாட்கோ மூலம் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம், நிலம் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து தொழில் முனைவு திட்டம் என்ற பெயரில் புதிய திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. பட்டியல் பழங்குடியினருக்கு திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. இவை தவிர கீழ்வரும் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. இவை குறித்த போதிய விழிப்புணர்வு தொழிலாளர்களிடையே இல்லை.

#### மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி திட்டம்

12 முதல் 20 பேர் கொண்ட பட்டியலினப் பெண்களை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட குழுவே இத்திட்டங்களின் பலன்களை அடைய தகுதியுள்ள குழுக்களாகும். அக்குழுவினர் வேறு எந்த அரசு திட்டத்திலும் மானியம் பெற்றிருக்க கூடாது என்பது ஒரு நியதியாக வைக்கப்பட்டுள்ளது.

#### மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி திட்டம்

மேற்சொன்னவாறே 12 முதல் 20 பேர் கொண்ட பட்டியலினப் பெண்களை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.



அக்குழுவினரும் வேறு எந்த அரசு திட்டத்திலும் மானியம் பெற்றிருக்க கூடாது என்பது நியதி.

#### மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி திட்டம்

குடும்ப ஆண்டு வருமானம் ஒரு லட்சத்திற்குள் இருக்கும் பட்டியலினத்தவருக்கு இந்தத் திட்டம் பொருந்தும். இந்த வருமான வரம்பையும் உயர்த்துவதற்கான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பதாரர்தான், தான் வறிய நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழை பெற்றுத் தர வேண்டும்.

மேற்சொன்னவற்றின் பயன்களை அடைய விரும்புவோர் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள்:

1. சாதி சான்று
2. குடும்ப ஆண்டு வருமானச் சான்று
3. குடும்ப அட்டை நகல்
4. வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிடச் சான்று
5. விலைப்புள்ளி 'டின்' எண்ணுடன் (Quotation with TIN No.)
6. ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் (வாகன கடனுக்கு மட்டும்)
7. முன் அனுபவச் சான்றிதழ்
8. ஆதார் அட்டை
9. வாக்காளர் அடையாள அட்டை
8. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

திட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கருத்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை உறுதியளித்து விண்ணப்பப் படிவத்தை மேற்சொன்ன ஆவணங்களை இணைத்து உரிய அதிகாரியிடம் கொடுத்து அதன் பலனைப் பெற வேண்டும்.

**தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம்:**

தூய்மைப் பணியாளர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 2008 முதல் தூய்மைப் பணியாளர்களுக்கான நல வாரியத்தை அமைத்து, அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கடந்த 10 ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளதால், துப்புரவுப் பணியாளர்களில் ஏற்கனவே பதிவு செய்தோர் தங்கள் பதிவை புதுப்பிக்கவும், இதுவரை பதிவு செய்யாதவர்கள் புதிதாக தங்களை பதிவு செய்து கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, நிரந்தரப்படுத்தப்படாத மற்றும் உதிரிகளாக பல்வேறு தனியார் அமைப்புக்களில் பணியாற்றும் அனைத்து வகை துப்புரவுப் பணியாளர்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி இதன் நன்மைகளைப் பெறலாம்.

**நல வாரியத்தில் பதிவு செய்வதற்கு தகுதியுடையோர்:**

கிராம ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள், தினக்கூலிகள், தொகுப்பூதிய பணியாளர்கள் ஏனைய அரசு மற்றும் அரசு சாரா தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் தனித்தனியாக பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர் நல வாரியத்தில் பதிவு செய்து பலனடைய தகுதியுடையவர்கள் ஆவர்.

**பதிவு செய்யத் தேவையான ஆவணங்கள்:**

1. துப்புரவு பணியாளர் என்பதற்கான சான்று நகல் (அடையாள அட்டை)
2. ஆதார் அட்டை நகல்
3. குடும்ப அட்டை நகல்
4. சாதிச்சான்று நகல்
5. சம்பளம் பெறும் வங்கி புத்தக நகல்
6. பதிவு செய்வோரின் புகைப்படம்
7. நாம் முன்மொழியும் நியமனதாரர் புகைப்படம்



**எங்கே பதிவு செய்வது?**

அந்தந்த மாவட்டத்திலுள்ள தாட்கோ அலுவலகத்தில் இதற்காக செயல்படும் அலுவலரிடம் மேற்சொன்ன ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** பதிவு செய்வதற்குப் பதிவுக் கட்டணம் ஏதுமில்லை. முற்றிலும் இலவசம்.

**கிடைக்கும் நன்மைகள்:**

| வ. எண் | நலத்திட்டங்கள் | ரூபாய் |
|---|---|---|
| 1 | விபத்து காப்பீட்டு திட்டம்<br>அ. விபத்து<br>ஆ. ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப | <br>5,00,000<br>1,00,000 முதல் 3,00,000 |
| 2 | இயற்கை மரணம் அடைந்தால் | 20,000 |
| 3 | மரணமடைந்தால் ஈமச்சடங்கு உதவி | 5,000 |
| 4 | கல்வி உதவித்தொகை<br>அ. 10ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு<br>ஆ. 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றோர்<br>இ. 11ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு<br>ஈ. 12ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு<br>உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றோர்<br>ஊ. 1. பட்ட படிப்பிற்கு<br>2. விடுதியில் தங்கி படித்தால்<br>எ. 1. பட்ட மேற்படிப்பிற்கு<br>2. விடுதியில் தங்கி படித்தால்<br>ஏ. 1. தொழில் நுட்பப் பட்டபடிப்பு<br>2. விடுதியில் தங்கி படித்தால்<br>ஐ. 1. தொழில் நுட்பப் பட்டமேற்படிப்பு<br>2. விடுதியில் தங்கி படித்தால்<br>ஒ. 1. ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>2. விடுதியில் தங்கி படித்தால் | <br>1,000<br>1,000<br>1,000<br>1,500<br>1,500<br>1,500<br>1,750<br>2,000<br>3,000<br>2,000<br>4,000<br>4,000<br>6,000<br>1,000<br>1,200 |
| 5 | திருமண உதவி<br>பெண் குழந்தையாக இருந்தால்<br>ஆண் குழந்தையாக இருந்தால் | <br>5,000<br>3,000 |
| 6 | அ. மகப்பேறு உதவி மாதம் 1–க்கு 1,000 வீதம்<br>ஆ. கருச்சிதைவு கருக்கலைப்பு | 6,000<br>3,000 |
| 7 | கண்கண்ணாடி வாங்கிட உதவி | 500–க்கு மிகாமல் |

மேற்கண்ட நலத்திட்டங்களை பெறுவதற்கு, அவற்றிற்கு தேவையான ஆவணங்களைத் தயார் செய்துகொண்டு, தங்கள் மாவட்டத்திலுள்ள தாட்கோ அலுவலகம் சென்று மேலாளரிடம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

## மாற்றுத்தொழில் மற்றும் சுயதொழில் தொடங்க உதவும் மாவட்டத் தொழில் மையம். (DIC)

**சிறு தொழில் தொடங்க கடன் உதவி**:

படித்த இளைஞர்கள் சுயமாக தொழில் செய்து முன்னேற உதவும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது தான் மாவட்ட தொழில் மையம். இந்த மாவட்ட தொழில் மையம் படித்த இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்க தொழில் கடன் உதவியுடன், அதற்கான பயிற்சிகளையும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அதேபோல கைவினைத் தொழில், குடிசைத் தொழில்களை ஊக்கப்படுத்துவதற்காக அவற்றை நிறுவனமாக பதிவு செய்கொள்ளும் வசதியையும் மாவட்டத்தொழில் மையம் ஏற்படுத்தி தருகிறது. இந்த திட்டத்தின் கீழ் சுயதொழில் தொடங்க வழங்கப்படும் வங்கிக் கடனில் 15 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத் தொழில் மையம் உள்ளது. அவற்றின் பலன்களை துப்புரவுப் பணியாளர்களும், பட்டியலின மக்களும் பெற்று வாழ்வில் முன்னேற மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக் குழு உதவிடவும் வழிகாட்டவும் எப்போதும் தயாராக இருக்கிறது.



# பிற்சேர்க்கை – II

## தொழிலாளர்கள் அறிந்திருக்க வேண்டிய அரசாணைகள்

**1. துப்புரவுப் பணியாளர்கள் – அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் – தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயித்தல் – குறித்த அரசாணை**

**நிதி (ஊதியப்பிரிவு)த்துறை**

அ.ஆ.நிலை எண்:385 நாள்: 01–10–2010

அ.ஆ.நிலை எண்:234, நிதி (ஊதியப்பிரிவு)த்துறை, நாள்: 01–06–2009.

**ஆணை:**

2010, செப்டம்பர் திங்கள், 15 ஆம் நாளன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக திறப்பு விழாவில் துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதார நலன் கருதி, அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணி முடித்த துப்புரவுப் பணியாளர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குப்பட்டு ரூ.1,300–3,000+ரூ.300/– தர ஊதியம் கொண்ட சிறப்புக் காலமுறை ஊதியம் (Special Time Scale of Pay) நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இவர்களுக்கு தற்போது பெற்றுவரும் அகவிலைப்படியுடன் சேர்த்து அரசு அலுவலர்களுக்கு அவ்வப்போது வழங்கப்படும் அகவிலைபடி உயர்வும் ஆண்டுதோறும் அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் மூன்று சதவிகிதம் ஆண்டு ஊதிய உயர்வும் சேர்த்து வழங்க இதன்மூலம் அரசு ஆணையிடுகிறது:

அ) துப்புரவு பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் அரசு அலுவலகத்திலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்.

ஆ) சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் தங்களது துறையின் கீழ் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் பெயர்கள்/எண்ணிக்கை மற்றும் பணிபுரிந்த காலம் குறித்த பணிப்பட்டியலை சரிபார்த்து தக்க சான்றிடுதல் வேண்டும்.

2) தினக்கூலி/தொகுப்பூதியம் அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையின்படி அவ்வகைப்பணியிடங்கள் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்வதற்கு உரிய கருத்துரு அரசுக்கு (நிர்வாகத்துறைக்கு) அனுப்பிவைக்க வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3) இவ்வாணை செப்டம்பர் திங்கள், 15–ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

4) மேலே பத்தி–1ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட சிறப்பு காலமுறை ஊதியத்திற்கான செலவினம் சம்பந்தப்பட்ட துறைகளின் கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பு உட்தலைப்பின் கீழ்வரும் '01. சம்பளங்கள்' என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

5) இச்செலவினத்திற்கு தேவையான கூடுதல் நிதி 2010–2011–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்குரிய செயற்குறிப்பினை அந்தந்த துறைத் தலைவர்கள் 2010–2011–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்க பிரேரணையில் சேர்த்து நிதித்துறைக்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6) அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கான ஆணை நிதி (பொது மாநில கழகம்) பிரிவில் தனியே வெளியிடப்படும்.

7) இவ்வாணை கூடுதல் நிதி ஒதுக்கப்பேரேடு எண்: 1065 (ஆயிரத்து அறுபத்து ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

க. சண்முகம்
அரசு முதன்மைச் செயலாளர்.



**2. பணியமைப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை 01.10.2010–ம் நாளன்று மூன்று ஆண்டுகள் பணிமுடித்து உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் – சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.5) துறை**

அரசாணை (நிலை) எண்.39 நாள்: 07.05.2013

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.385, நிதித் (ஊதியப் பிரிவு) துறை, நாள் 01.10.2010.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 82643/ 2010/இ.2, நாள் 07.09.2011 மற்றும் 21.02.2013.

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணி முடித்த துப்புரவுப் பணியாளர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ரூ.1,300–3,000/ ரூ.300/– தர ஊதியம் கொண்ட சிறப்பு காலமுறை ஊதியம் (Special Time Scale of Pay) நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அவ்வரசாணையில் தினக்கூலி/தொகுப்பூதியம் அடிப்படையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையின்படி, அவ்வகைப் பணியிடங்கள் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்வதற்கு உரிய கருத்துருவினை அரசுக்கு (நிர்வாகத் துறைக்கு) துறைத் தலைவர்கள் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. இதனைத் தொடர்ந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு,

அவ்வரசாணை வெளியிடப்பட்ட நாளான 15.09.2010–ம் நாளன்று, மூன்று ஆண்டுகள் பணி முடித்த துப்புரவு பணியாளர்களை முறையான பணியிடத்திற்கு கொண்டு வருவதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார். அத்துடன் மூன்று ஆண்டுகள் பணி முடித்த துப்புரவுப் பணியாளர்களின் பட்டியலையும் அனுப்பி வைத்துள்ளார். அதில், கிராம ஊராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் 9,896 நபர்கள், ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் 187 நபர்கள், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் 18 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன துப்புரவு பணியாளர்களுக்கு உண்டான ஊதியம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து வழங்கப்படும் எனவும், துப்புரவு பணியாளர்களுக்கு அரசு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டால், ஓராண்டில் ஏற்படும் கூடுதல் செலவுத் தொகை: ரூ.18,72,76,618/– (ரூபாய் பதினெட்டு கோடியே எழுபத்திரெண்டு இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து அறுநூற்று பதினெட்டு மட்டும்) ஆகும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கருத்துருவில் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதன்படி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 15.09.2010–ம் நாளன்று மூன்று ஆண்டுகள் பணி முடித்த பிற்சேர்க்கையில் காணப்படும் துப்புரவுப் பணியாளர்கள் கிராம ஊராட்சியில் பணிபுரியும் 9,896 நபர்கள், ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் 187 நபர்கள், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் 18 நபர்கள் ஆகியோர்களை முறையான பணியிடத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, அவ்வகை பணியாளர்களின் பணியிடங்களை, சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிக்கச் செய்யலாம் எனக் கருதி, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு முதன்மைச் செயலாளர்



**3. பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்தல் குறித்த ஆணை வெளியிடப்படுகிறது.**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.5) துறை**

அரசாணை (நிலை) எண்.129 நாள்: 14.09.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை, நாள் 07.05.2013.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.26279?2013/இ.2, நாள் 10.04.2013.

**ஆணை:**

1. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 01.10.2010 நாளன்று 3 ஆண்டுகள் பணி முடித்து உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களின் பணியிடங்களை சிறப்புக் காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. 09.04.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ், கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

- ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவுப் பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. கிராமங்களில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள தற்போது 9,896 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பகுதிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமித்தல் அவசியமாகிறது.
- இதனைக் கருத்திற்கொண்டு, மக்கள் தொகை 3,000–க்கும் கீழ் உள்ள 8,469 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக ஒன்று வீதமும், 3,001 முதல் 10,000 வரை உள்ள 3,908 கிராம ஊராட்சிகளில்,

கிராம ஊராட்சிக்கு கூடுதலாக இரண்டு வீதமும், 10,000–க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 147 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக மூன்று வீதமும், ஆக மொத்தம் 16,726 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது.

- இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் பணியிடங்களில் பணி அமர்த்தப்படுபவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் 2,000 ரூபாயும், அகவிலைப்படியாக 40 (அரையாண்டு) ரூபாயும் வழங்கப்படும். இதன் காரணமாக, ஒரு பணியிடத்திற்கு தோராயமாக 25 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்தில் 16,726 துப்புரவு பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு 41 கோடியே 81 லட்சட்து 50 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், கிராமங்களில் தூய்மையைப் பேண, துப்புரவுப் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். தற்போது துப்புரவு பணியை மேற்கொள்ள 9,896 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே இத்துறையில் உள்ளனர். ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவு பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. எனவே, இப்பகுதிகளில் துப்புரவு பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமித்தல் அவசியமாகிறது. பெரும்பாலான கிராம பஞ்சாயத்துகளில் துப்புரவு பணியாளர்கள் தெருக்கள் மற்றும் சந்துகளை தினமும் சுத்தம் செய்து கழிவு கூளங்களை சேகரித்து பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துகின்றனர். கிராம மக்களின் வாழ்க்கை தரம் உயரும் அளவில், கிராம சுகாதாரத்தை மேம்படுத்த மக்கள் தொகைக்கேற்ப, மேலும் பணியாளர்களை நியமிக்க அவசியமாகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிக்கையின்படி, பணியாளர்களை நியமிக்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. மேற்கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

- மக்கள் தொகை 3,000–க்கும் கீழ் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு கூடுதலாக 1 பணியிடமும்,



- 3001 முதல் 10,000 வரை உள்ள ஊராட்சிகளுக்கு கூடுதலாக 2 பணியிடங்களும்,

- 10,000–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளுக்கு கூடுதலாக 3 பணியிடங்கள் என மொத்தம் 16,726 துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மேற்படி துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதம் தலா ரூ. 2,000/– தொகுப்பூதியம் (தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர் பெறும் நிலை) / ரூ.40/– அக விலைப்படி (அரையாண்டு) ஊதியத்தில் என மொத்தம் 16,726 துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அரசாணை (1ப) எண். 385, நிதித்துறை, நாள் 01.10.2010–ன்படி, மூன்று ஆண்டுகளுக்கு பிறகு இப்பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.1,300–3,000/ரூ. 300 தர ஊதியம் அளிக்கப்படும்.

5. மேற்கண்ட ஆணைகளால், கிராம ஊராட்சிகளுக்கு ஏற்படும் செலவுகளை, அந்தந்த கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என ஆணையிடப்படுகிறது.

6. கிராம ஊராட்சித் தலைவர்கள், அந்தந்த கிராம ஊராட்சி மக்கள் தொகையின் அடிப்படையில், துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்துகொள்வதற்கான வழிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

7. இந்த அரசாணையின் படிகளை அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் உடனே அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இந்த அரசாணை 20.07.2013 நாளிட்ட நிதித்துறையின் அ.சா.எண். 183/JS (AR)/2013ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி.சங்கர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**4. பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை 2013–14 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 ன் கீழ் 09.04.2013 அன்று கிராம ஊராட்சிகளில் கூடுதலாக 16726 துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்தல் – துப்புரவு பணியாளர்களுக்கான பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் குறித்த நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை**

அரசாணை (நிலை) எண்.130 நாள் 14.09.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டவை

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.26279/2013/ இ2 நாள் 10.4.2013, 03.07.2013 மற்றும் 07.08.2013
2. அரசாணை (நிலை) எண்.129 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (5) துறை, நாள். 14.09.2013
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.27279/2013/ இ2, நாள்.27.07.2013.

**ஆணை:**

1. 09.04.2013 அன்று சட்டமன்ற பேரவையில் விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கிராம ஊராட்சிகளில் கூடுதலாக மக்கள் தொகைக்கு ஏற்ப 16,726 துப்புரவு பணியாளர் பணியிடங்களை ஏற்படுத்தி துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து அவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் 2000/– ரூபாயும், அகவிலைப்படியாக 40/– ரூபாயும் (அரையாண்டு) வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்காணும் அறிவிப்பின்படி மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட கடிதம் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரிடம் கருத்துரு பெறப்பட்டு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கிராம



ஊராட்சிகளில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதலாக 16,726 துப்புரவு பணியாளர்களை நியமித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கிராம ஊராட்சிகளில் கூடுதலாக நியமிக்கப்படும் துப்புரவு பணியாளர்களுக்கான பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இவ்வரசாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு கிராம ஊராட்சிகளில் கூடுதலாக நியமிக்கப்படும் துப்புரவு பணியாளர்களுக்கான பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி.சங்கர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பிற்சேர்க்கை**

கிராம ஊராட்சிகளில் கூடுதலாக நியமிக்கப்படும் துப்புரவு பணியாளர்களுக்கான பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகள்.

**பணி நிபந்தனைகள்:**

**1. நியமனமுறை:** மாவட்ட ஆட்சித் தலைவரின் செய்திக் குறிப்பு மூலம் (Press release) உரிய தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்பட்ட விண்ணபத்தின் அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட வேண்டும்.

**2. நியமன அலுவலர்:** கிராம ஊராட்சித் தலைவர் நியமனம் செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார். மேலும் கிராம ஊராட்சியில் துப்புரவு பணியாளர்கள் நியமிப்பது தொடர்பாக சம்மந்தப்பட்ட ஊராட்சியில் தீர்மானம் இயற்றப்பட வேண்டும்.

**3. நிர்வாகக் கட்டுப்பாடு:** இந்தப் பணியிடங்களில் இனி, நியமனம் செய்யப்படும் ஒவ்வொரு பணியாளரும்; தொடர்புடைய ஊராட்சியின் செயல் அலுவலராக உள்ள கிராம ஊராட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிவர். துப்புரவுப் பணியாளர்கள் கிராம ஊராட்சியில் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் துப்புரவு செய்யும் நேரம் குறித்த அறிவிப்பு ஊராட்சி மன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

**4. சம்பளம்:** இவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்களுக்கு மாதம் தொகுப்பூதியமாக ரூ.2,000 மற்றும் அகவிலைப்படியாக ரூ.40/– (ஒரு அரை ஆண்டிற்கு) வீதம் வழங்கப்படும். மூன்றாண்டுகள் பணிமுடித்த துப்புரவு பணியாளர்களுக்கு அரசாணை (நிலை): எண் 385 நிதித்துறை நாள்.1.10.2010–ன் படி சிறப்புகால முறை ஊதியம் (ரூபாய். 1300–3000 தர ஊதியம் ரூ. 300) ரூபாய் மாதந்தோறும், கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்படும். முறையான பணியமைப்பின்பாற்பட்ட பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் ஓய்வூதிய பயன்கள், தேர்வுநிலை, சிறப்பு நிலை, கருணை அடிப்படையில் வாரிசுகளுக்கு பணி, வருங்கால வைப்புநிதி, ஈட்டிய விடுப்பு காசாக்குதல் போன்ற சலுகைகள் இப்பணியிடத்திற்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படி அனுமதிக்கத்தக்கவை அல்ல.

அரசு முதன்மைச் செயலாளர்
பிரிவு அலுவலர்

**5. சிறப்பு ஊதிய விகிதத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம் சிறப்பு குடும்ப ஓய்வூதியம்/ஓய்வுபெறும்போது மொத்தப்பணம் வழங்க ஆணைகள் – பிறப்பிக்கப்பட்டுள்ளன.**

**பின்வருவனவற்றைப் படியுங்கள்:**

1. G.O.Ms.No.385, நிதி (பணம் செலுத்தும் செல்) துறை, தேதி: 1–10–2010.
2. G.O.Ms.No.40, நிதி (பணம் செலுத்தும் செல்) துறை, தேதி: 22–02–2017.
3. G.O.Ms.No.189, நிதி (பணம் செலுத்தும் செல்) துறை, தேதி: 27–06–2017.
4. G.O.Ms.No.314, நிதி (பணம் செலுத்தும் செல்) துறை, தேதி: 25–10–2017.



**ஆணை:**

மேலே முதலில் வாசிக்கப்பட்ட அரசாணையில், 3 ஆண்டுகள் பணி முடித்த தினக்கூலி/தொகுப்பூதியத்தில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு சிறப்பு கால அளவு ஊதியம் ரூ.1,300–3,000 / தர ஊதியம் ரூ. 300/–. மேலும், அவர்களுக்கு சிறந்த வாழ்வாதாரத்தை வழங்குவதற்கான நலன்புரி நடவடிக்கையாக, வழக்கமான அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் வகையில், அவர்களுக்கு DA, HRA, CCA மற்றும் வருடாந்தர உயர்வுகளும் அனுமதிக்கப்பட்டன.

2. உத்தியோகபூர்வக் குழு, சிறப்பு நேர ஊதிய விகிதத்தில் ஊழியர்களின் கோரிக்கையை ஆய்வு செய்து, மதிய உணவுப் பணியாளர்கள்/அங்கன்வாடி பணியாளர்களுக்குப் பொருந்தும் வகையில் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் மொத்த மானியம் வழங்கப் பரிந்துரைத்துள்ளது.

3. கவனமாக ஆய்வு செய்த பிறகு, உத்தியோகபூர்வ குழுவின் மேற்கண்ட பரிந்துரையை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய இரண்டிலும் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சிறப்பு ஊதிய விகிதத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம் மொத்தப் பணம் ஓய்வூதியத்தின் போது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி வழங்கப்படும்:

| வ. எண் | துறை/பதவியின் பெயர் | சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம் Rs. | மொத்த பணம் Rs. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| I | பள்ளிக் கல்வி | | |
| 1. | கிராம நூலகர் | 2,000 | 1,00,000 |
| II | அனைத்து அரசு துறைகள்/உள்ளாட்சி அமைப்புகள் | | |
| 2. | துப்புரவு பணியாளர்கள் | 2,000 | 50,000 |

4. கிராம நூலகரைப் பொறுத்தமட்டில் மொத்தத் தொகையும் சிறப்பு ஓய்வூதியமும் முதலில் மேற்கண்ட கணக்குத் தலைப்புகளிலிருந்து பெறப்படும்.

பொது நூலக இயக்குநர், கிராம நூலகருக்கு வழங்கப்படும் மொத்தத் தொகை மற்றும் சிறப்பு ஒய்வூதியத்திற்கான செலவினங்களை நூலக நிதியில் இருந்து பின்வரும் கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும். உள்ளாட்சி அமைப்பு ஊழியர்களின் செலவுகள் அந்தந்த உள்ளாட்சி அமைப்பின் நிதியில் மேற்கொள்ளப்படும்.

‘‘0071–ஒய்வூதியம் மற்றும் பிற ஒய்வூதியப் பலன்களுக்கான பங்களிப்புகள் மற்றும் மீட்டெடுப்புகள் 01 சிவில் 101. சந்தா மற்றும் பங்களிப்புகள் AR ரசீதுகள் மொத்தப் பணம் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஒய்வூதியம் [DPC 0071-01-101-AR- 0004].

5. இந்த உத்தரவுகள் 1–10–2017 முதல் அமலுக்கு வரும்.

(ஆளுநர் உத்தரவின்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசாங்கத்தின் கூடுதல் தலைமைச் செயலர் (FAC).

**6. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் – மாநில நிதிக் குழு மானியத்தின் மூலம் கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை 66,025 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்துதல் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ஒரு ஆண்டுக்கான செலவினம் ரூ.206.04 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அதி.1) துறை**

அரசாணை (நிலை) எண்.54 நாள்: 10.4.2018

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண். 47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 26.3.2015.
2. அரசாணை (நிலை) எண். 10, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 20.1.2016.



3. அரசாணை எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 24.10.2016.
4. அரசாணை (நிலை) எண்.53, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–1) துறை, நாள் 5.4.2018.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.52673/2016/SBM (G)–3இ நாள் 6.4.2018.

**ஆணை:**

மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திட 66,025 துப்புரவு பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ. 2,600/– வீதம் ஆண்டொன்றிக்கு ரூ. 206.04 கோடியை மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் கிராம ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்களை ஈடுபடுத்தி மாநில நிதிக்குழு மானியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை கீழ்க்கண்ட ஏற்பாடுகள் மற்றும் வழிக்காட்டி நெறிமுறைகளின்படி தொடர்ந்து செயல்படுத்திடலாம் என்பதை தெரிவித்துள்ளார்.

**1) திடக்கழிவு மேலாண்மை பணிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் (அல்லது) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் (Outsourcing முறையில்) தூய்மை காவலர்களை ஈடுபடுத்துதல்:**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், இப்பணிக்காக 150 குடும்பங்களுக்கு ஒரு தூய்மைக் காவலர் வீதம் 12,524 கிராம ஊராட்சிகளிலும் கால நிர்ணய வேலை அளவு அடிப்படையில் மொத்தம் (66,025 தூய்மைக் காவலர்கள்) தேவைப்படுவர். இவர்களை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் (Outsourcing முறையில்) மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும். மேற்கண்ட தூய்மைக் காவலர்களை வரையறுக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யலாம்.

**2) தூய்மைக் காவலர்களுக்கான மாத ஊதியம் வழங்குதல்:**

2018–19 ஆம் ஆண்டில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் (Outsourcing முறையில்) திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலருக்கு மாதம் ரூ. 2,600/– வீதம் ஒவ்வொரு ஊராட்சியிலிருந்தும் சம்மந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக தூய்மைக் காவலர்களின் வங்கிக் கணக்கிற்கு /முறையில் ஊதியம் வழங்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியிலிருந்து, தூய்மைக் காவலர்களுக்கான ஊதியத்தை நேரடியாக வழங்கக்கூடாது.

சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி தனது திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி கணக்கிலிருந்து ஒவ்வொரு மாதமும் 5–ம் தேதிக்குள் முந்தைய மாதத்தின் வாராந்திர வருகைப் பட்டியல் தொகுப்பின்படி (NMR) பணிசெய்த காலத்திற்கான மொத்த ஊதியத்தை சம்பந்தப்பட்ட அமைப்பிற்கு, அதாவது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வங்கி கணக்கிற்கு விடுவிக்கப்பட வேண்டும். மேற்படி அமைப்பானது, சம்பந்தப்பட்ட தூய்மைக் காவலர்களின் மாத ஊதியத்தை அவர்களது வங்கி கணக்கில் ECS மூலம் மட்டுமே வரவு வைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு பணமாகவோ காசோலையாகவோ வழங்கப்பட கூடாது.

**3) தூய்மைக் காவலர்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் மருத்துவ காப்பீடு:**

முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை காப்பீடு பெறப்படாத தூய்மைக் காவலர்களுக்கு, மருத்துவ காப்பீடு பெற்று அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.

இதைத் தவிர வருடத்திற்கு குறைந்தபட்சம் இருமுறை தூய்மை காவலர்களுக்கு வட்டார அளவில் சுகாதாரத் துறை மூலம் மருத்துவ பரிசோதனைக்கான ‘‘சிறப்பு மருத்துவ முகாம்’’ நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ பரிசோதனை அட்டையில் (Health Card) உரிய பதிவுகள் செய்து அதை அவர்கள் தொடர்ந்து பராமரிக்குமாறு அறிவுரை வழங்கப்பட வேண்டும்.



**4) தூய்மைக் காவலர்களுக்கான பயிற்சி:**

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்களுக்கு குறைந்தபட்சம் காலண்டிற்கு ஒருமுறை வட்டார அளவில், குப்பைகளை தரம் பிரித்தல், உரமாக்குதல், மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை தனியே சேகரித்து விற்பனை செய்தல், மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் போன்ற நடைமுறைகள்/செயலாக்கம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். பயிற்சிக்கான செலவினத்தை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி நடைபெறுவதை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் ஆகியோர்களால் உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆளுநரின் ஆணைப்படி

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**7. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் அவர்கள் 30.03.3023 அன்று சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பு:**

திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தில் தூய்மைக்காவலர்களாக பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வரும் தூய்மைக்காவலர்களுக்கு அவர்கள் பெற்றுவரும் தொகுப்பூதியத்தை ரூ. 3,600 – லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கிராம ஊராட்சிகளையும் தூய்மையாக வைத்திருக்க தூய்மைக் காவலர்கள் இல்லம்தோறும் திடகழிவுகளை சேகரித்து, தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக மாற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 3600 ரூபாயிலிருந்து 5000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக அரசு கூடுதலாக 112 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும்.’’

**8. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை 16508 துப்புரவுத் தொழிலாளர்கள் கிராம பஞ்சாயத்துகளில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருங்கிணைந்த ஊதியத்தில் ஈடுபட்டு வருகின்றனர் – சிறப்பு கால அளவு ஊதிய–ஆணைகள் – வழங்கப்பட்டன.**

**ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (E5) துறை**

G.O.(Ms). No. 14 தேதி: 07.01.2020

**படிக்க:**

1. G.O.(Ms).No.385, Finance (Pay Cell) துறை, தேதி 01.10.2010.
2. G.O. (Ms) No.39, RD&PR (E5) துறை, தேதி 07.05.2013.
3. G.O.(Ms).No.129, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (E5) துறை, தேதி 14.09.2013.
4. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரிடமிருந்து கடிதம் RC.No. 33644/2018/E2, தேதி. 14.06.2018

மேலே படித்த G.O-வில், அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அல்லது ஒருங்கிணைந்த ஊதியத்தில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள், மூன்று ஆண்டுகள் பணி முடித்திருந்தால், அவர்களை சிறப்பு கால அட்டவணைக்கு கொண்டு வர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலே வாசிக்கப்பட்ட G.O. 2–ல், 15.09.2010 அன்று மூன்று ஆண்டுகள் பணி முடித்த கிராம பஞ்சாயத்துகளில் பணிபுரியும் 9,896 துப்புரவு பணியாளர்களை சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.04.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தின் விதி 110ன் கீழ் 16,726 துப்புரவுப் பணியாளர்களை கிராம பஞ்சாயத்துகளின் மக்கள்தொகை அடிப்படையில் ஒருங்கிணைந்த ஊதியத்தின் கீழ் பணியில் அமர்த்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டதாக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குனர் கூறியுள்ளார். மாதம்



ரூ.2,000/–, டிஏ (DA) ரூ.40/–. மேற்கண்ட அறிவிப்பின்படி, மேற்கண்ட அரசாணை 3 – ல், கிராம பஞ்சாயத்துகளின் மக்கள்தொகை அடிப்படையில் 16,726 துப்புரவு பணியாளர்களை ஒருங்கிணைந்த ஊதியத்தில் ஈடுபடுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குனர் மேலும் கூறியதாவது: ஒருங்கிணைந்த ஊதியத்தில் மேலே வாசிக்கப்பட்ட அரசு ஆணை 3–ல் பணிபுரிந்த 16,508 துப்புரவு பணியாளர்கள் ஐந்தாண்டு பணியை நிறைவு செய்துள்ளதாகவும், சிறப்பு கால அட்டவணையை வழங்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் பணிச்சுமை மற்றும் 3 ஆண்டுகளுக்கும் மேலான பணியை முடித்திருப்பதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் மேலே முதலில் படித்த அரசாணையின்படி காலமுறை ஊதியத்தின் கீழ் வரத்தகுதியுடையவர்கள். இது தொடர்பாக ஆண்டு கூடுதல் செலவு ரூ.31,43,78,352/– ஆகும். கிராமப் பஞ்சாயத்துகள் செலுத்த வேண்டிய மாநில நிதிக் கமிஷன் மானியத்திலிருந்து செலவினங்களைச் சந்திக்கலாம், இதனால் அரசின் கருவூலத்திற்கு நிதிச்சுமை ஏற்படாது. எனவே, கிராம ஊராட்சிகளில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருங்கிணைந்த ஊதியத்தில் பணிபுரியும் 16,508 துப்புரவு பணியாளர்களுக்கு மேற்கண்ட உண்மைகளை பரிசீலித்து சிறப்பு கால அவகாசம் வழங்க தேவையான அரசாணைகளை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குனர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

4. கவனமாக ஆய்வு செய்த பிறகு. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குனரின் முன்மொழிவை ஏற்று, அதன்படி கிராம பஞ்சாயத்துகளில் பணிபுரிந்த 16,508 துப்புரவு பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த ஊதியம் குறித்த 3–ஆவது அரசாணையின்படி சிறப்பு காலமுறை ஊதியம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. மேலே படிக்கப்பட்ட 1–ஆவது அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக, கிராம பஞ்சாயத்துகளுக்கு மாநில நிதி ஆணைக்குழு மானியத்தில் இருந்து பின்வரும் நிபந்தனைகளுடன் செலவினம் மேற்கொள்ளப்படும்.

(i) G.O. (Ms) No.385, Finance (PC) துறை, 01.10.2010–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய.

(ii) கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வரவேண்டிய SFC மானியத்தில் இருந்து எதிர்பார்க்கப்படும் வருடாந்திர கூடுதல் செலவினம் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்யவும், எந்த நேரத்திலும் (அதாவது SFC மானியத்துடன் சொந்த ஆதாரங்களுடன்) இருக்கும் 49% க்கு மேல் நிர்வாகச் செலவுக்கு கூடுதல் நிதி வழங்கப்படக் கூடாது. நிர்வாக செலவாக 49% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது).

(iii) முறைப்படுத்துதலின் பணப்பலன் முறைப்படுத்தல் உத்தரவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும், எனவே நிலுவைத் தொகை குறித்த கேள்வி எழாது.

(ஆளுநர் உத்தரவின்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசாங்கத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்.

## Roc.No.33644/2018/E2, தேதி.24.01.2020

**பொருள்: ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை 16,508 கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைந்த ஊதியத்தில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் சிறப்பு காலமுறை ஊதியம் – ஆணைகள் வெளியிடப்பட்டது– அனுப்பப்பட்டது.**

குறிப்பு: G.O(MS)No**. 14, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (E5) துறை, Dt.07.01.2020**

G.O(MS)No. எண். 129, கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் (E5) இன் படி கிராம பஞ்சாயத்துகளில் ஈடுபட்டுள்ள 16,508 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியத்தை அரசு அனுமதித்துள்ள 1–ஆவது குறிப்புக்கு நான் அன்பான கவனத்தை அழைக்கிறேன். துறை b. 14.09.2013 3 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருங்கிணைந்த ஊதியத்தில்.

எனவே G.O(MS) எண்.129, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (E5) துறை, Dt.14.09.2013 இன் படி கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைந்த ஊதியத்தில் ஈடுபட்டுள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மட்டுமே மேற்கண்ட G.O. கண்டிப்பாக அமல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த G.O.



இன் அடிப்படையில் சிறப்பு நேர ஊதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட சுகாதாரத் தொழிலாளர்களின் விரிவான தொகுதி வாரியான அறிக்கையை அனுப்பவும். G.O. இன் கீழ் வருவதைத் தவிர வேறு எந்த நபரும் நடைமுறைக்கு வரவில்லை என்பதை உறுதிப்படுத்தவும்.

**9. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் 517 பகுதிநேர துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல் வெளியிடப்படுகிறது.**

**பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நல (சி.ந.ஆ.பி2)த் துறை**

அரசாணை (நிலை) எண்.101 நாள் 22–12–2020

**ஆணை:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களால், கடந்த 21–03–2020 அன்று சட்டமன்றத்தில் 2020–21 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, புதிய அறிவிப்புகளில், அறிவிப்பு எண்.16 பின்வருமாறு அறிவிக்கப்பட்டது.

விடுதிகளில் 3 ஆண்டுகளுக்கு மேல் 3,000 ரூபாய் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் பகுதிநேர துப்புரவு பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிறப்பு காலமுறை ஊதியம் (திருத்தியமைக்கப்பட்ட நிலை 2, குறைந்தபட்சம் ரூ. 4,100, அதிகபட்சம் ரூ. 12,500 வழங்கப்படும். இதனால் விடுதிகளில் பணிபுரியும் 718 பகுதிநேர துப்புரவு பணியாளர்கள் பயன்பெறுவர். இதற்காக 2 கோடியே 32 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் 1,354 விடுதிகள் (1099 பள்ளி விடுதிகள் – 255 கல்லூரி விடுதிகள்) தற்போது செயல்பட்டு வருகின்றன என்றும், விடுதிகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்கும் பொருட்டும், மாணவ, மாணவிகளின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டும் 100 மாணவ. மாணவியர்களுக்கு மேல் தங்கிப் பயிலும் 66

விடுதிகளுக்கு சிறப்பு காலமுறை ஊதியத்தில் முழுநேர துப்புரவாளர்களை நியமனம் செய்தும், 100 மாணவ, மாணவியர்களுக்கு குறைவாக உள்ள விடுதிகளில் ரூ.2,000/– தொகுப்பூதிய அடிப்படையில் பகுதிநேர துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்தும் ஆணையிடப்பட்டது என்றும் பகுதிநேர துப்புரவு பணியாளர்களின் மாதாந்திர தொகுப்பூதியத்தை ரூ. 2,000/–த்திலிருந்து ரூ. 3,000/– ஆக உயத்தப்பட்டது என்றும், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், பகுதிநேர துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் வேலை வாய்ப்பகம் மூலமே நிரப்பப்படுகின்றன என்றும், மாதம் ரூ. 3,000 என மிக குறைந்த தொகுப்பூதியம் பெற்று வருவதால், பகுதிநேர துப்புரவு பணியாளர்கள் மிகுந்த சிரமமான சூழ்நிலையில் உள்ளதாகவும், மேற்காணும் பணியாளர்கள் பகுதி நேரமாக நியமிக்கப்பட்டாலும் பணி நிறைவு செய்து வீடு திரும்புவதற்கு ஒருநாள் ஆகிவிடுவதால், இவர்கள் வேறு பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படுகிறது என்றும், இப்பணி பகுதிநேரப்பணி என்பதால், அவர்கள் இப்பணியை துறந்துவிட்டு கூடுதலாக வருமானம் உள்ள தொழிலுக்கு சென்று விடும் நிலை உள்ளது என்றும் தெரிவித்து, இத்துறை விடுதிகளில் பணிபுரியும் 517 பகுதிநேர துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்க வேண்டியும் மேற்கண்ட அறிவிப்பை செயல்படுத்தும் விதமாகவும் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு கவனமுடன் ஆராய்ந்த, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சரின் அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக அதனை ஏற்று பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் கீழ் செயல்படும் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/மாணவியர்களின் சுகாதாரத்தை கருத்திற்கொண்டும், விடுதிகளை தூய்மையாக பராமரிப்பதன் அவசியத்தினை கருதியும் துப்புரவாளர் பணியிடம் இன்றியமையாதது என கருதப்படுவதால், 01–03–2010 அன்றுள்ளபடி, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் இணைப்பில் கண்டுள்ள 517 பகுதிநேர துப்புரவு பணியாளர்களை, இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து, ரூ. 4,100 – ரூ. 12,500 என்ற சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் (Special Time Scale of Pay) முழுநேர துப்புரவு பணியாளர்களாக பணியமர்த்தி அரசு ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுந்தர மோகன் B
அரசு முதன்மைச் செயலாளர்.



**10. கடித எண்.22043/இ5/2018–3, நாள் 26.02.2021.**

அனுப்புநர்

திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,

பெறுநர்

ஆணையர்,
ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பனகல் மாளிகை. சைதாப்பேட்டை,
சென்னை–15.

அய்யா,

பொருள்: பணியமைப்பு கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு சிறப்பு மாத ஓய்வூதியம் ரூ.2,000/– மற்றும் ஒட்டுமொத்த தொகை ரூ.50,000/ தெளிவுரை வழங்குதல் தொடர்பாக,

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண். 39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள்: 07.06.2013.
2. அரசாணை (நிலை) எண்.348, நிதி (ஊ.பி) துறை, நாள்: 28.11.2017.
3. அரசாணை (நிலை) எண்.14, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள்: 07.01.2020.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண். 11094/ 2018/இ2, நாள் 30.08.2018 மற்றும் 08.01.2021.
5. அரசு கடித எண். 22043/இ5/2018–2, நாள் 24.12.2018.

பார்வையில் காணும் கடிதங்கள் மற்றும் அரசாணைகளின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது,

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 01.10.2010–ம் நாளன்று மூன்று ஆண்டுகள் பணி முடித்து உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அல்லது தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வந்த துப்புரவுப் பணியாளர்களில் 10,101 துப்புரவு பணியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது, அதனைத் தொடர்ந்து 16,508 துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் அளித்து பார்வை மூன்றில் காணும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை இரண்டில் காணும் அரசாணையில் அனைத்து அரசு துறைகள்/ உள்ளாட்சி அமைப்புகளில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு மாத ஓய்வூதியமாக ரூ. 2000 மற்றும் ஓய்வூதிய ஒட்டுமொத்த தொகை ரூ. 50000 வழங்கலாம் என ஆணை வெளியிடப்பட்டது.

பார்வை நான்கில் காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற துப்புரவு பணியாளர்களுக்கு ஓய்வு பெறும்போது சிறப்பு மாத ஓய்வூதியமாக ரூ. 2,000 வழங்கிடவும், ஓய்வூதிய ஒட்டுமொத்த தொகையாக ரூ. 50,000 வழங்கிடவும் உரிய தெளிவுரை வழங்கிடுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளனர்;.

மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி, தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி சிறப்பு மாத ஓய்வூதியம் ரூ. 2,000 மற்றும் ஒட்டுமொத்தத் தொகை ரூ. 50,000 வழங்கலாம் என இதன்மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக.



**11. தமிழ்நாடு அரசு ஊழியர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் – அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும் போது மரணம் அடைந்தால் வழங்கப்படும் மொத்தத் தொகை – ரூ.3,00,000/– லிருந்து ரூ.5,00,000/ – ஆக உயர்த்துதல் – ஆணைகள் வெளியிடப்பட்டது.**

நிதி (ஓய்வூதியம்) துறை

G.O. (Ms) No..197, தேதி: 01.09.2021

**ஆணை:**

படிக்க:–

1. G.O.Ms.No.1515, நிதித்துறை, தேதி: 03–12–1973.
2. G.O.Ms.No.101, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 03–02–1975.
3. G.O.Ms.No.265, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 01–04–1985.
4. G.O.Ms.No.704, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 10–07–1989.
5. G.O.Ms.No.531, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 19–07–1991.
6. G.O.Ms.No.501, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 14–08–1996.
7. G.O.Ms.No.483, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 12–09–1997.
8. G.O.Ms.No.131, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 21–02–2006.
9. G.O.Ms.No.57, நிதி (ஓய்வூதியம்) துறை, தேதி: 22–02–2016

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் குடும்ப நல நிதித் திட்டம், தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என மறுபெயரிடப்பட்டது, 1–1–1974 முதல், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை ஈடுபடுத்தாமல், பல்வேறு வகைப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் சுயக் காப்பீட்டுத் திட்டமாகத் தொடங்கப்பட்டது. குறிப்பாக, இந்தத் திட்டம், தற்காலிக மற்றும் ஓய்வூதியம் பெறாத சேவையில் உள்ளவர்கள், வெளிநாட்டுப் பணியில் இருப்பவர்கள் மற்றும் பணி நிமித்தமாக பிரதிகளாக பணியமர்த்தப்பட்டவர்கள் (தற்காலிகமாக அத்தியாவசித் தேவைகளுக்காக பணியமர்த்தப்பட்டு ஊதியம் பெறுபவர்கள்) மற்றும் மாகாண நிர்ணயம் செய்யப்பட்ட பணிக்குட்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்கள் உட்பட அரசு ஊழியர்கள் பணியிடை மரணம் அடையும்போது, அவர்களின் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான நிதித்திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் சந்தாதாரரின் பங்களிப்பு ஆரம்பத்தில் ரூ.10/– வீதம் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. அப்போது பணியில் இருக்கும்போது சந்தாதாரர் இறந்தால் மொத்தத் தொகையாக ரூ.10,000/– வழங்கப்பட்டது.

2. இந்தத் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய மாதாந்திர பங்களிப்பு மற்றும் மொத்தத் தொகை அவ்வப்போது திருத்தப்பட்டது. மேலே வாசிக்கப்பட்ட ஒன்பதாவது அரசாணையில், ஒவ்வொரு மாதமும் ரூ.60/– சந்தாதாரர்களின் பங்களிப்பாகவும், 01.02.2016 முதல் இத்திட்டத்தின் கீழ் மேற்சொன்ன அரசு ஊழியர் மரணம் அடைந்தால் அவர்களுடைய குடும்பத்தாருக்கு வழங்கப்படும் மொத்த தொகை ரூ.3,00,000/– என்றும் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

3. மாண்புமிகு தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 13–08–2021 அன்று 2021–2022 பட்ஜெட் உரையில், ''பணியில் இருக்கும் போது இறந்துபோகும் அரசு ஊழியரின் குடும்பத்திற்கு குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் மொத்த நிதி ரூ.3 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும் என்று அறிவிப்பு செய்தார். அதன்படி, ஒவ்வொரு மாதமும் ஊழியர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சந்தாத் தொகை ரூ.110/– ஆக உயர்த்தப்படும். குழுக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் உள்ள ஊழியர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்''.

4. அதன்படி, அரசு பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது:

அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை ரூ.5,00,000/– ஆக உயர்த்தப்படுகிறது.

ஆ) இந்தத் திட்டத்தின் கீழ் ஊழியர்களின் மாத சந்தா பங்களிப்பு செப்டம்பர் 2021 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரூ.110/– ஆக உயர்த்தப்படுகிறது. மேலும் இந்த பங்களிப்பு அரசு ஊழியர்களின் பணி ஓய்வு பெறும் வரை தொடரும்.

இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிர்வகிக்கும் தற்போதைய விதிகள் மற்றும் பிற அறிவுறுத்தல்கள் இருக்கின்றவாறே தொடரும்.

5) மேற்கண்ட உத்தரவுகள் 01–09–2021 முதல் அமலுக்கு வருகிறது.

(ஆளுநர் உத்தரவின்படி)

எஸ்.கிருஷ்ணன்
அரசாங்கத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்

**இந்த சமூகம் நலமுடன் வாழ தங்களையே வருத்திக்கொண்டு அன்றாடம் தூய்மைப்பணி செய்துவரும் தூய்மைப் பணியாளர்களுக்கு இந்த நூல் சமர்ப்பணம்...**